
ஞாலகுருவின் படைப்புக்கள்

கார்த்திகை மாதம், இந்துமத ஆண்டு 43,73,125

# இந்துவேத இந்துமத விடுதலைப் போர்



"தமிழனுடைய
கோயில்கள் தமிழரல்லாதவர்
கைகளிலேயே
இருக்கின்றன ...
கோயிலுக்குச் செல்கின்ற
எந்தத் தமிழனும்
தன்னுடைய கடவுளுக்கு
தனக்குப் புரியாத
அன்னிய மொழியில்
பூசைகள் செய்யப் படுவது ஏன்?
என்று சிந்திக்கவே
மாட்டேன் என்கிறுன்?!"




அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,

அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார்,

ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூருர்.



இந்து இலக்கியக் கழக வெளியீடு.

43,73,125ஆம் ஆண்டின் கார்த்திகை மாத வெளியீடு.

தலைப்பு:- **இந்துவேத இந்துமத விடுதலைப் போர்.**

## உள்ளுறை


1. **“அருட்போர் ஆயத்தப் பணி அருளாணை - 13”** - இந்து மறுமலர்ச்சி இயக்கம், இந்து முன்னேற்றக் கழகம் ஆகிய நிறுவனங்களின் தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும் விளக்கி, இ.மு.க.வில் பணிபுரிபவர்கள் செய்ய வேண்டிய பணிகளை விவரித்து குருதேவர் விடுத்த நெடிய அஞ்சல் வடிவக் கட்டுரை.
2. **“இந்துவேதம் தமிழ் மொழியில் இருக்கிறது; உலக வேதம்தான் இந்துவேதம்”** - இந்துவேத விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டியதின் அவசியத்தை குருதேவர் விளக்கிய ஒலிப்பேழையிலிருந்து எடுக்கப்பட்ட சில கருத்துக்கள்.

# அருட்போர் ஆயத்தப் பணி அருளாணை - 13

இடம்: பொன்னேரி.
நாள்: 25-8-92.

இ.ம.இ., இ.மு.க. தலைவர்,
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி,
கருகுல ஆதீனம், குருமகாசன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்
விடுக்கும் அருளாணை பெற்ற குருவாணை.

பெறுநர்:
இராசிபுரம் இரத்தினஞ் செட்டியார் மகன் கங்காதரக் குமார்,
மேற்கு மண்டல இ.மு.க. தலைவர்,
17, கவரைத் தெரு, இராசிபுரம் (அஞ்சல்),
சேலம் மாவட்டம் - 637408.

இ.மு.க. செயல்வீரர் கங்காதரக்குமார் அவர்களே!

1. தாங்கள் தங்களிடமிருந்த இ.ம.இ., இ.மு.க. என்ற இரு நிறுவனங்களின் மேற்கு மண்டலத் தலைமைப் பொறுப்புகளிலிருந்து தங்கள் விருப்பம் போல் ஏதேனும் ஒன்றினை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி அருளாட்சி நாயகத்தின் அருட்போர் ஆயத்தப் பணிகள் ஆரம்பமாகிய போது அருளாணை அனுப்பப்பட்டது.

அதன்படி தாங்களே விரும்பி மேற்கு மண்டல இ.ம.இ. தலைமைப் பொறுப்புக்களை விட்டு விட்டு மேற்கு மண்டல இ.மு.க. தலைமைப் பொறுப்புகளை மட்டும் ஏற்றுக் கொண்டீர்கள். இதை உணர்ந்து இ.மு.க. தலைவராக மட்டும் செயல்பட வேண்டும்.

2. அதாவது தாங்கள் இ.ம.இ. செயல்வீரருக்குரிய தலைப்பாகை, முழங்காலுக்கு மேல் மடித்து அணியக் கூடிய நாலுமுழ வேட்டி, ஆறுமுழம் (அ) எட்டு முழம் உள்ள இடுப்புக்கச்சு, திரிசூலம், கையில் வைத்துக் கொள்ளும் சக்கரங்கள் வைத்த மெய்ஞ்ஞானக்கொடி, மந்திரிக்கும் மயில்பீலி முதலியவற்றில் எதையும் பயன்படுத்தக் கூடாது, பயன்படுத்தக் கூடாது, பயன்படுத்தக் கூடாது. **பயன்படுத்தவே கூடாது.** இதேபோல், யாருக்கும் மந்திரிக்கக் கூடாது, யாருக்கும் இ.ம.இ. செயல்வீரராக இருந்து திருநீறு, குங்குமம், முடிகயிறு, தாயத்து, உருத்திராக்கம், சக்கரம், ... முதலியவை வழங்கக் கூடாது.

**குறிப்பு:-** இ.மு.க. செயல்வீரர் என்ற முறையில் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டு இ.ம.இ. வட்டாரங்களில் சேர்க்குமாறு கூறக்கூடிய பொருளை மட்டும் சேர்க்கலாம். அதாவது, இ.மு.க.வின் கடமையாக இச்செயலைச் செய்ய வேண்டும்.

3. தாங்கள் எக்காரணம் பற்றியும் **குருவாணையின்றி** அருட்கோட்டப் பூசைகளில் கலந்து கொள்ள வேண்டாம்.

**குறிப்பு:-** இ.மு.க.வின் பணிக்காக அருட்கோட்டப் பூசைகள் நிகழுமிடத்திற்குச் சென்றால் இ.மு.க. செயல்வீரராகவே அப்பூசைகளுக்குப் பார்வையாளராகக் கலந்து கொள்ள வேண்டும். எச்சரிக்கை.

4. தாங்கள் இ.ம.இ.யின் கொள்கை விளக்கங்களையோ, அருட்பணி விரிவாக்கத் திட்டப் பணிகளையோ எங்கும் விளக்கியுரைக்கத்

தேவையில்லை. அதாவது, நமது இ.மு.கவின் கொள்கையான இந்துவேத, இந்துமத சமுதாயக் கொள்கைகளையும், அரசியல் கொள்கைகளையும் விளக்கியுரைக்க முற்படுங்கள். இ.மு.க. உறுப்பினர் பட்டியலை மாவட்ட நிர்வாகக் குழுக்களிடமிருந்து பெற்று; இ.மு.க.வினரை (தாலுகா) வட்டங்கள், ஊர்கள், கிராமங்கள் அடிப்படையில் முன்கூட்டி அஞ்சலட்டை அனுப்பி அவர்களை ஒன்று கூட்டிப் பேசுங்கள். வட்ட அளவிலோ, வட்டார அளவிலோ, நகர அளவிலோ, கிராம அளவிலோ இ.மு.க. கிளை அலுவலகங்களைத் துவக்குங்கள். மூன்று வகுப்பாகப் பகுத்து அல்லது வகுத்து மக்களை செயல்படச் செய்யுங்கள்.

4.1. **முதல் பகுப்பு:** முதியவர்கள், அதாவது **வேலையிலிருந்து (அ) பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்** (ROA = Retired Officers’ Association) அமைப்பு. இதனுடன் **இளஞ்சிறுர் அமைப்பு** உயர்நிலைப்பள்ளி வரை படிக்கக்கூடிய மாணவர்களை அல்லது 16லிருந்து 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள், பள்ளிக்கூடம் போகாமல் வேலை பார்க்கும் இளைஞர்களும் அடங்குவார்கள். (Boys Association). ஆக இந்த இரண்டு அமைப்புக்களும் சேர்ந்ததுதான் இ.மு.க.வின் முதல் அமைப்பு ஆகும். (The First Division of I.M.K.)

**குறிப்பு:-** இந்த அமைப்பில் ஆண், பெண் என்ற வேறுபாடு கிடையாது. படித்தவர், படிப்பவர், படிக்காதவர் என்ற வேறுபாடு கிடையாது. அரசாங்கப் பணியில் இருந்தவர், இல்லாதவர் என்ற வேறுபாடு கிடையாது. சாதி வேறுபாடு கிடையாது. ஏழை, பணக்காரார் என்ற வேறுபாடு கிடையாது.

4.2. **இரண்டாவது பகுப்பு** இ.மு.க.வின் இரண்டாவது அமைப்பு (The Second Division of I.M.K.):- தமிழ் இலக்கியம் படிக்கும் மாணவர்கள், படித்த மாணவர்கள்; தமிழில் ஈடுபாடும், புலமையும் உடைய இளைஞர்கள், பெரியோர்கள், தமிழாசிரியர்கள், தமிழ்

எழுத்தாளர்கள், கவிஞர்கள், தமிழ்மொழி, இனம், பண்பாடு, நாகரிகம், கலை, இலக்கியம், வரலாறு, ... முதலியவற்றில் ஆர்வமுள்ளவர்கள்; தமிழ்மொழி உரிமையிலும், தமிழ் வளவளர்ச்சியிலும் ஈடுபாடு உள்ளவர்கள், பொதுமக்களில் நடுத்தர வயதுள்ளவர்களில் தமிழ்மொழியில் ஈடுபாடு உள்ளவர்கள் முதலியவர்களை தமிழாசிரியர்கள் தலைமையின் கீழ் ஒன்று திரட்டல். இந்த அமைப்பு **தமிழ்மொழி ஈடுபாட்டாளர் அமைப்பு** என்று இ.மு.க.வில் இரண்டாவது அமைப்பாக 'தமிழ்ச் சங்கம்' என்ற பெயரில் உருவாக்கப்பட வேண்டும்.

4.3. **மூன்றுவது பகுப்பு** (The Third Division of I.M.K.):- இதில் வேலையில்லாத படித்த இளைஞர்கள் (The Unemployed educated youngsters); போதிய படிப்பில்லாமல் அல்லது படிப்பை இடையிலே நிறுத்தி விட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கள் (The Unemployed youngsters); பார்க்கின்ற வேலைகளின் மூலம் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காமையால் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடியாமல் ஏங்கி ஏமாற்றமுற்று எரிச்சல் பெற்று தீய சத்திகளாக, வெறிநிலையை, வன்முறையில் நம்பிக்கையைப் பெற்று வரும் பாட்டாளி இளைஞர்கள்; என்ற மூன்று வகையினரையும் ஒன்று சேர்த்து உருவாக்கும் **வேலை தேடுவோர் அமைப்பு** (The Youngsters seeking proper jobs) இ.மு.க.வின் மூன்றுவது அமைப்பாக உருவாக்கப்படல் வேண்டும்.

5. மேலே குறிப்பிட்டது போல் இ.மு.க.வின் மூன்று அமைப்புக்களையும் முதலில் மாவட்ட அளவில் அமைக்க வேண்டும். பிறகுதான் வட்டாரம், வட்டம் என்று குறுகிய எல்லைகளுக்குள் உருவாக்க முயல வேண்டும். இவைகளை உருவாக்குவதற்கு தமிழ்மொழியறிவு, தமிழ்மொழி வரலாற்றறிவு, தமிழிலக்கிய அறிவு, தமிழிலக்கிய வரலாற்றறிவு, தமிழர்களின் பண்பாடு, நாகரிகம்

பற்றிய அறிவு, தமிழர்களின் சமுதாய வரலாற்றறிவு, தமிழர்களின் அரசியல் வரலாற்றறிவு, இன்றைய தனிமனித வாழ்வியல் அறிவு, குடும்ப வாழ்வியல் அறிவு, சமுதாய வாழ்வியல் அறிவு, அரசியல் வாழ்வியல் அறிவு, ... முதலிய பல்வேறு வகைப்பட்ட அறிவுகள் (Varieties of Knowledges in different fields are required to the I.M.K. Office-Bearers and party-guides and advisors) நமது இயக்க வட்டார பதவிகளில் இருப்பவருக்கும்; கழகத்தை நடத்துபவர்களுக்கும்; கழகத்துக்கு பரிந்துரை நல்குபவர்களுக்கும் தேவை, தேவை, தேவை.

<u>**குறிப்பு**</u>**:-** இக்கருத்துக்களின்படிப் பார்த்தால் நீ, உன்னை இ.மு.க.வின் மண்டலத் தலைவராகிச் செயல்படுவதற்கேற்ப என்னென்ன அறிவுகளைப் பெற்றிருக்கிறாய்? பெற முயற்சித்திருக்கிறாய்? என்பது பற்றி இந்த அஞ்சலைப் படித்த பிறகாவது ஒரு மணி நேரம் தனித்திருந்து சிந்தித்துப் பார். அப்போதுதான் உனக்கு உன்னைப் பற்றிப் புரியும். அதாவது, இன்னும் நீ, இ.ம.இ. செயல்வீரனாகத்தான் செயல்படுகிறாய்! உன்னால் கடவுள்களைப் பற்றிப் பேசுவதும், பூசைகளைப் பற்றிப் பேசுவதும், அ.வி.தி. பணிகளில் ஈடுபடுவதும் **கைவிடப் படவில்லை, கைவிடப்பட முடியவில்லை**, இதுதான் உண்மை. இதை ஒப்புக்கொண்டால் உன் தப்புக் கணக்குகள் புரியும்.

6. அதாவது, உன்னைப் போல், <u>நம்மில் பலர் இன்னும் இ.ம.இ. கருத்துக்களையும், செய்திகளையும், செயல்திட்டங்களையும் வைத்துக் கொண்டு தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்</u>. எனவேதான், நம்மவர்கள் பூசாறிகளாகவும், சோதிடர்களாகவும், குறிகாரர்களாகவும், மந்திரவாதிகளாகவும், பசனைக் கூட்டத்தவர்களாகவுமே தொடர்ந்து கருதப்பட்டு வருகிறார்கள். எனவேதான், நாம், தனிமனித வாழ்வுக்கும், குடும்ப வாழ்வுக்கும் மட்டுமே வழிகாட்டக் கூடிய இந்து மறுமலர்ச்சி இயக்கத்தவர்களாகவே தொடர்ந்து செயல்படுகிறோம். இதிலும்

பெரும்பாலான நம் மக்கள் பதினெண்சித்தர்களின் சித்தர்நெறியெனும் சீவநெறியான **மெய்யான இந்துமதம் பற்றித் தெரியாமல்** பிறமண்ணினரான பிருமணருடைய *சனாதன தர்மம்* எனப்படும் வேதநெறியான *பொய்யான ஹிந்துமதத்தையே* நம்பி வாழ்கிறார்கள். இவர்களைத் திருத்துவதே பெரும்பாடு.

7. பொய்யான ஹிந்துமதத்தால்தான் மெய்யான இந்துமதத்தின் உயிர்நாடியான மந்திரிக்கும் கலைகள், பரிகாரம் செய்யும் கலைகள், இந்துவேத நூல்கள், இந்துமத நூல்கள் ... முதலியவற்றைச் செயலாக்கப் புறப்பட்டிருக்கும் நமக்கு நம்முடைய கோயில்களுக்குள்ளேயே வரவேற்பில்லை. அதாவது, நமது கோயில்களின் பூசாறிகளும், பூசைமொழிகளும் அன்னியர்களின் கைகளிலேயே இருக்கின்றன. அன்னியர்களின் அடிமைகளின் கைகளிலேயே இருக்கின்றன. இதனால்தான், நமது சன்னிதானங்கள் நம்முடைய கோயில்களுக்குள் சென்று பூசைமொழி வாசகங்களை ஓதவோ, பொதுமக்களுக்கு மந்திரித்து அருள் வழங்கவோ, அருள்வாக்கு சொல்லவோ, அருட்கணிப்புச் சொல்லவோ, பரிகாரங்கள் சொல்லவோ, அருளுரை ஆற்றவோ முழுமையாகத் தடைவிதிக்கப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால், நாம் எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் அந்த கோயில் பூசாறிகளும், நிர்வாகிகளும் நம்மைப் பார்த்ததுமே நமக்கு எதிர்ப்பும், மறுப்பும், வெறுப்பும் தெரிவிப்பவர்களாகவே மாறிவிடுகிறார்கள். இதை மாற்றுவதற்கு எவ்வளவு காலம் பிடிக்குமோ தெரியாது, தெரியாது, தெரியாது.

8. நம் இந்துமதத்திலிருந்து மாற்று மதங்களுக்குச் சென்றவர்கள் கூட நம்முடைய கருத்துக்களை வரவேற்றுச் சிந்திக்கவும், நம்மைச் சந்திக்கவும் தயாராக இருக்கிறார்கள். ஆனால், நம்மவர்கள் நமது ஊர்க் கோயில்களில் நாம் நுழைவதையே எதிர்க்கிறார்கள்; நாம் எது கூறினாலும் கேட்கவே மாட்டேன் என்கிறார்கள். இதுபற்றி

நாம் சிந்தித்தேயாக வேண்டும். அதாவது நாம் நமது மத வரலாறுகளேயும், அருளாளர்களின் வரலாறுகளேயும், அருளாளர்களின் போதனேகளேயும், சாதனேகளேயும், நமது வேத விளக்கங்களேயும், நமது வேதங்கள் தருகின்ற தேவர்களேப் பற்றிய விளக்கங்களேயும்; பூசைமொழி பற்றியும், வேதநூல்கள் பற்றியும், மதநூல்கள் பற்றியும் கூறுபவைகளே நம்மவர்களே <u>அதிசயமானவைகளாக</u>, கேள்விப்படாத அற்புதங்களாக, நமது மத விரோதமானவைகளாக வியப்போடும், விரோதத்தோடும், வெறுப்போடும், மறுப்போடும், எதிர்ப்போடும், பகையோடுமே பார்க்கிருர்கள்! பார்க்கிருர்கள்! பார்க்கிருர்கள்!

ஏனென்ருல், தமிழனுடைய கோயில்கள் தமிழரல்லாதவர் கைகளிலேயே இருக்கின்றன; அல்லது தமிழ் மொழிப் பற்ருே, இனப் பற்ருே, பண்பாட்டுப் பிடிப்போ இல்லாதவர்களின் கைகளிலேயே இருக்கின்றன. இதைப் பச்சையாகச் சொல்ல வேண்டுமென்ருல், கோயிலுக்குச் செல்கின்ற எந்தத் தமிழனும் **<u>தன்னுடைய கடவுளுக்கு தனக்குப் புரியாத அன்னிய மொழியில் பூசைகள் செய்யப்படுவது ஏன்?</u>** என்று சிந்திக்கவே மாட்டேன் என்கிருன், சிந்திக்கவே மாட்டேன் என்கிருன், சிந்திக்கவே மாட்டேன் என்கிருன். இதற்கு என்ன செய்வது? என்ன செய்வது? என்ன செய்வது?

தமிழனுடைய இந்துமதத்துக்கு மலேயாளத்தாேே, தெலுங்கேே, கன்னடத்துக்காரேே அல்லது வேறு மாநிலத்தவேே, வேறு மொழிக்குரியவேே ஏன் ஆச்சாரியஞக, குருபீடமாக, மடாதிபதியாக, குருக்களாக இருக்கிருன் அல்லது இருக்க நேரிட்டிருக்கிறது என்று எந்தத் தமிழனுமே எள்முனேயளவு கூட எண்ணிப் பார்க்க மறுக்கிருன், மறுக்கிருன், மறுக்கிருன். அது மட்டுமல்ல, இப்படிச் சிந்திக்க வேண்டுமென்று கூறுபவர்களே எரிமலேயெனக் குமுறி வெடித்து எதிர்ப்பவர்களே நம்மில் ஏராளம், ஏராளம், ஏராளம்.

எனவே, இவற்றை எண்ணியெண்ணி நம்மவர்கள் இனியாவது, கோயில் வாசல்களில் நிற்பதை விடுத்துப் பொதுமேடைகளில் ஏறி நின்று, இந்துவேதமும் இந்துமதமும் கூறுகின்ற சமுதாய வாழ்வுக்கு உரியவைகளையும், அரசியல் வாழ்வுக்கு உரியவைகளையும் இடிமுழக்கமாக முடிவில்லாமல் முழக்க வேண்டும், முழக்க வேண்டும், முழக்க வேண்டும். அப்பொழுதுதான் நம்மவர்களின் கால்களிலும் கைகளிலும் பூட்டப் பெற்ற விலங்குகள் உடைத்து, ஒடித்து, நொறுக்கி, விலக்கப்பட்டிடும், விலக்கப்பட்டிடும், விலக்கப்பட்டிடும். அது போலவே, நம்மவர்கள் காதுகளில் அடைக்கப்பட்டிருக்கும் எண்ணைத் துணிகள் முழுமையாக எடுக்கப்பட்டிடும், எடுக்கப்பட்டிடும், எடுக்கப்பட்டிடும். அதேநேரத்தில் நம்மவர்களின் கண்களில் கட்டப்பட்டிருக்கும் கருப்புத் துணிகள் அவிழ்த்து எறியப்படும், அவிழ்த்து எறியப்படும், அவிழ்த்து எறியப்படும்.

அதற்குப் பிறகுதான் நமது நோக்கும் போக்கும் ஊக்கம் பெற்று ஆக்கப் பூர்வமான சாதனைகளைச் சாதிக்கும், சாதிக்கும், சாதிக்கும். எனவே, இந்த நொடி முதலாவது உங்களுடைய இ.ம.இ. போக்குகளையும், நோக்குகளையும் முழுமையாக மாற்றிக் கொண்டு உங்களை இ.மு.க.வின் நோக்குகளும், போக்குகளும் உடையவர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள், ஆக்கிக் கொள்ளுங்கள், ஆக்கிக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் இ.ம.இ.யிலிருந்து விலகிவிட்ட நீங்கள், இ.மு.க.விலிருந்து விலக்கி ஒதுக்கப்படக் கூடிய காலக்கட்டம் வந்திடும். எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை.

9. அதாவது உங்களுக்கு இ.மு.க.வின் வரலாறு, இ.மு.க.வின் கொள்கை, இ.மு.க.வின் குறிக்கோள், இ.மு.க.வின் செயல்திட்டம், இ.மு.க.வின் நிகழ்காலச் செயல்வீரர்கள், செயல்நிலைகள், செயலகங்கள், தயாராகி வரும் இ.மு.க.வின் கையெழுத்துப் பிறதிகள், இயந்திரப் பொறி நகல்கள், அச்சிட்ட அறிக்கைகள், அறிவிக்கைகள், நூல்கள்,

ஒலிப்பேழைகள், ... முதலியவைகளைத் தெரிந்து கொள்ள முற்படுங்கள், தெரிந்து கொள்ள முற்படுங்கள், தெரிந்து கொள்ள முற்படுங்கள். புரிந்து பயன்படுத்த முன்வாருங்கள், புரிந்து பயன்படுத்த முன்வாருங்கள், புரிந்து பயன்படுத்த முன்வாருங்கள். இல்லையேல், இ.மு.க.வின் தத்துவத் தேரோட்டத்தோடு அல்லது செயல் நீரோட்டத்தோடு சேர்ந்து செல்ல முடியாமல் போய்விடுவீர்கள். இதற்காக வருந்திப் பயனில்லை, பயனில்லை, பயனில்லை.

**குறிப்பு:-** பல்வேறு வகையான செய்தித் தொகுப்புகளின் அடிப்படையில்தான் உங்களுக்கு இந்த அறிவுறுத்தல் (Advising Letter) அஞ்சல் எழுதப்படுகிறது.

10. **இ.மு.க.வின் செயல்திட்டம்:-**

10.1. அருளாட்சி நாயகமான அண்டபேரண்ட அருட்பேரரசர் அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார், தஞ்சைத் தாத்தா அவர்கள் இந்துமத ஆண்டு நாற்பத்துமூன்று இலட்சத்து எழுபத்து மூன்றுயிரத்துத் தொண்ணூற்று மூன்றும் ஆண்டு (43,73,093) = கி.பி. 1992 ஆக்குரோச ஆண்டு வைகாசித் திங்கள் (மாதம்) மூன்றும் நாள் சனிக்கிழமை (மே மாதம் 16ஆம் தேதி) வந்திட்ட ஞானம் வழங்கு பருவபூசையிலும், அதே வைகாசித் திங்கள் 32ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (சூன் 14ஆம் தேதி) [இந்த ஒரே வைகாசி மாதத்தில் வந்திட்ட இரண்டாவது ஞானம் வழங்கு பருவபூசை நாளான இன்று] மீண்டும் இரண்டாவது முறையாக **'அருட்போர் ஆயத்தப் பணிகள் துவக்கம்'** (ஆரம்பம்) பற்றிய அறிவிப்பினை அருளாட்சி நாயகம் வழங்கினுர். அதன்படியே, அவர் **'அருட்போர் ஆயத்தப் பணிகளுக்குரிய சாதனமாக அறிவித்துள்ள 'அறிவிக்கை எண் 7777 முழுக்க முழுக்க இ.மு.க.வின் செயல்திட்டமாக அருளாணை பெற்ற குருவாணையாக அறிவிக்கப் பட்டிருக்கிறது.'**

10.2. எனவே, தாங்கள் இனிமேல் தங்களுடைய முதல் கட்ட இ.மு.க. பணியாக இ.ம.இ. செயல்வீரர்களால் நமது அருளாட்சி நாயகம், அருட்போர் ஆயத்தச் சாதனங்களுள் ஒன்றுக வழங்கியுள்ள புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டையைப் பயன்படுத்தி காட்டாற்றுப் போக்கில் நூற்றுக் கணக்கில் சேர்க்கப்பட்டு வரும் புதிய இ.மு.க. உறுப்பினர்களை ஒன்று திரட்டுங்கள், ஒன்று திரட்டுங்கள், ஒன்று திரட்டுங்கள்.

**<u>குறிப்பு-1</u>:-** அதாவது முன்பு சுமார் 5000 வரை வரிசை எண் உள்ள உறுப்பினர் எண்ணுக்குரிய அட்டைகள் இ.மு.க.வில் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டிருந்தார்கள். ஆனல், அருட்போர் ஆயத்தப் பணிகள் ஆரம்பமாகி விட்டதால், **'இந்துக்களுக்கு உடனடியாக இந்துமத உணர்வும், நம்பிக்கையும், ஈடுபாடும், ஏற்படுத்தப் பட்டேயாக வேண்டும்'** என்பதற்காக 'அருட்கொடை வள்ளலாகவும்', 'ஞானவள்ளலாகவும்', 'ஞானவேந்தராகவும்', 'இந்துவேத நாயகமாகவும்', 'இந்துமதத் தந்தையாகவும்', 'இந்துமதத்தின் முழுமுதற் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவராகவும்' உள்ள நமது அருளாட்சி நாயகம் அவர்கள் அருளுலகப் பொருளுலகப் பாதுகாப்புகளை நல்கும் மிகச் சிறந்த சாதனமாக "புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டை" **அருளாணை வழங்கு குருவாணை ஓலைநாயகமான இன்றைய குருதேவராகிய யாம் எமது வடிவத்தையும், மெய்ஞ்ஞானக்கொடியையும் முத்திரையாகப் பதித்து வெளியிட ஆணை பிறப்பித்திட்டார்**.

**<u>குறிப்பு-2</u>:-** இந்தப் புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டை அருளுலகப் பொருளுலகப் பாதுகாப்புகளை நல்கும் சிறந்த சாதனமாகப் பயன்படும் என்பதனுல்; 'நம் மக்கள் 25 காசு, 50 காசு, 1 ரூ, 2 ரூ, 5 ரூ, 10 ரூ. ,,, என்று பணம் செலவழித்துப் பெறக்கூடிய <u>அருளூறு பூசனைப் பொருட்களைப் போல்</u> இந்த 2 ரூபாய் காணிக்கைக்குரிய

புதிய இ.மு.க. உறுப்பினரட்டை எல்லோராலும் வாங்கிப் பயன்படுத்தப் படட்டும், வாங்கிப் பயன்படுத்தப் படட்டும், வாங்கிப் பயன்படுத்தப் படட்டும்' என்பதுதான் நமது அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தாவின் மிகத் தெளிவான செயல்திட்டம், மிகத் தெளிவான செயல்திட்டம், மிகத் தெளிவான செயல்திட்டம்.

**குறிப்பு-3:-** அதாவது இந்தப் புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டையை வாங்குபவர்கள் **ஓராண்டு** காலத்திற்கு தங்களுடைய கையிலும், பையிலும், மடியிலும், முந்தானையிலும் (முன் + தானை) வைத்து எடுத்துக் கொண்டு எந்தச் செயலில் ஈடுபட்டாலும், முயற்சியைச் செய்தாலும் அதற்கு அருளுலக ஆதரவும் துணையும் பாதுகாப்பும் கிடைக்கும்.

**குறிப்பு-4:-** இந்தப் புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டையை வீட்டுப் பூசையிலும், கோயில் பூசைகளிலும்; திருவிளக்கிலோ, கற்பூரச் சோதியிலோ, ஊதுபத்தி சாம்பிராணிப் புகையிலோ காட்டி, பின் வழிபாடு செய்து கொண்டால் மிகச் சிறந்த அருளுலக அறிமுகமும் பயனும் கிடைக்கும். எனவே, இந்த அட்டையை எல்லாப் பூசைகளிலும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு-5:-** "தனிமனிதர்களின் நனவுகளையும், கனவுகளையும், அச்ச கூச்ச இச்சை மாச்சரியங்களையும் ஒழுங்குபடுத்தியும், கட்டுப்படுத்தியும் மனநிறைவையும், அமைதியையும் விளைவித்துத் தரும் ஆற்றலுடையது இந்தப் புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டை". எனவேதான், இந்தப் புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டையை ஏழை எளிய பாட்டாளிப் பாமர மக்கள் அன்றாடம் தங்கள் வாழ்க்கைக் குறைகளை அகற்றிக் கொள்வதற்காக இந்த உறுப்பினர் அட்டையைத் தங்கள் தலைக்குக் கீழ் வைத்து உறங்கும்படி - <u>பகலிலும் சரி, இரவிலும் சரி எப்பொழுது உறங்கச் சென்றாலும்</u>

<u>தலைக்கடியில் வைத்துக் கொள்ள வேண்டும்</u> என்று அருளாட்சி நாயகம் அருட்கொடையாக அறிவிப்புச் செய்துள்ளார்.

**<u>குறிப்பு-6</u>:-** இந்தப் புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டை ரூ.10/- காணிக்கை செலுத்தியோ, ரூ.25/- காணிக்கை செலுத்தி பீடத் தாயத்தோ, ரூ.48/- காணிக்கை செலுத்திப் பாதுகாப்புச் சக்கரமோ பெற்றுக் கொள்ள முடியாத ஏழை எளிய பாட்டாளிப் பாமர மக்களுக்காகவே, அருட்கொடை வள்ளலான அருளாட்சி நாயகத்தால் மிக நுட்ப திட்ப ஒட்பம் நிறைந்த மாந்தரீக தாந்தரீக ஏந்தரீகப் பூசைகளைச் செய்து தயாரிக்குமாறு அருளாணை வழங்கப்பட்டிருக்கிறது.

அதன்படியே, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகவும் மடாதிபதியாகவும், கருகுல ஆதீனமாகவும் வாழுகின்ற குருமகா சன்னிதானம், அரசயோகிக் கருவூர்ராகிய யாம் இரவு பகலாகப் பூசைகளைச் செய்து ஒவ்வொரு புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டையிலும் எமது **கைப்படவே கையொப்பமிட்டுப்** பூசை செய்து அருளேற்றி மிகச் சிறந்த **<u>அருளுலகப் பொருளுலகப் பாதுகாப்புச் சாதனமாக</u>** இந்தப் புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டையைத் தயாரித்து வழங்குகிறோம். எனவே, **இந்தப் புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டை ஒவ்வொன்றும் தயாரிக்கப் பல பத்து ரூபாய்கள் செலவாகின்றன**. இருந்தபோதிலும், இந்த புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டை ரூ.2/- மட்டும் காணிக்கையாகப் பெற்றுக் கொண்டு வழங்கப்படுகிறது.

இதுதான் நமது தலைவர், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார், அருளாட்சி நாயகத்தின் அருட்கொடை வள்ளல் திறம். எனவே, <u>'இந்தப் புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டை' ஓர் அருளூறு பூசனைப் பொருளாக, மிகச் சிறந்த அருளுலகப் பொருளுலகப் பாதுகாப்புச் சாதனமாக, நோய்க்கு மருந்தாக, பத்தியாளருக்கு சத்தி தரும் விருந்தாக... பொதுமக்களிடம் விளக்கியுரைத்தே</u>

<u>இந்தப் புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டையை வழங்க வேண்டும், வழங்க வேண்டும், வழங்க வேண்டும், வழங்கியேயாக வேண்டும்</u>.

10.3. இந்தப் புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டை ஓராண்டு காலத்திற்கு மட்டுமே உரியது. அதாவது இதனுடைய அருளாற்றல், பாதுகாப்பு ஆற்றல், மருந்து ஆற்றல், சத்திச் சித்தி ஆற்றல் முதலிய ஆற்றல்கள் ஓராண்டு காலத்திற்குள் தீர்ந்து விடும். அதாவது, மின்விளக்கு (bulb) ஆற்றல் இழப்பது போல், மின்கலம் (battery cell) ஆற்றல் இழப்பது போல், மருந்துகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஆற்றல் அற்றுப் போவதுபோல இந்தப் புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டை ஓராண்டு கால அளவிற்கு மட்டுமே செயல்படக் கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கிறது. அவ்வளவுதான்.

**<u>குறிப்பு</u>:-** பதினெண்சித்தர்கள் எதைக் கூறினாலும் சரி, எதைச் செய்தாலும் சரி, அதற்குரிய கால அளவைத் திட்டவட்டமாகக் கூறுவார்கள். சான்றாக, இந்துமத வரலாறு, நான்கு யுக வரலாறு, குறிப்பிட்ட பூசைகளைச் சித்தி செய்யும் கால அளவு, குறிப்பிட்ட மருந்துகளைச் சாப்பிட வேண்டிய கால அளவு, குறிப்பிட்ட மருந்துகளுக்குரிய ஆற்றலின் கால அளவு... முதலியவைகள் எல்லாம் மிகமிகத் தெளிவாக திட்டவட்டமாக வரையறுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. இதேபோலத்தான், எந்தத் தாயத்து, எந்த முடிகயிறு, எந்த உருத்திராக்கமாலை, எந்த சக்கரம் எவ்வளவு காலத்திற்கு ஆற்றலுடையதாக இருக்கும் என்பதையும்; மேற்படி பொருள்களை எந்தெந்த கால அளவுகளில் மாற்ற வேண்டும் என்பதையும் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்கள் பதினெண்சித்தர்கள். எனவேதான், “<u>பதினெண்சித்தர்களின் இந்துமதம் திட்டவட்டமான, மிக நுட்பமான அளவுகளை உடைய மிகச் சிறப்பான விஞ்ஞானம் அல்லது அறிவியல்</u>” (The Pathinen Siddhars’ Induism is a

finite and minute, correct science) என்று பதினெண்சித்தர்களே பாராட்டிக் கொள்கிறுர்கள், பாராட்டிக் கொள்கிறுர்கள், பாராட்டிக் கொள்கிறுர்கள்.

10.4. இந்தப் புதிய இ.மு.க. அட்டையை வாங்குகிறவர்கள் இந்துமதத்தின் பயன்களை அடைவதன் மூலம், இந்து முன்னேற்ற கழகத்திற்கு பொது ஆதரவாளர்கள் ஆகிறவர்களே தவிர உறுப்பினர்கள் அல்ல.

**<u>குறிப்பு-1</u>:-** இதற்காகத்தான் இந்த இ.மு.க. உறுப்பினர் அட்டையைப் பெற்ற தனிமனிதர்கள் 15 காசு மதிப்புள்ள அஞ்சலட்டையில் தங்களுடைய எத்தகைய பாதிப்பாறுலும் தெரிவித்து பதினெண்சித்தர் மடத்திற்கு [அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார், பதினெண்சித்தர் மடம், 13, குமாரசாமி தெரு, வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை - 53, தொலைபேசி: 654447] எழுதினுல் உடனே அவர்களுக்குப் பாதுகாப்புப் பூசைகள் செய்யப்படும்.

**<u>குறிப்பு-2</u>:-** பாதிப்பாளர்கள் 30 காசு மதிப்புள்ள ஒரு பதில் அஞ்சலட்டை (Reply Card) அனுப்பினுல் உடனே அவர்களுக்கு பூசை செய்தது பற்றியும், வாழ்த்தும் பதிலாக அனுப்பப்படும்.

**<u>குறிப்பு-3</u>:-** ரூ.2/- மதிப்புள்ள அஞ்சல் தலைகள் (stamps) அனுப்பினுல் பல ரூபாய்கள் மதிப்புள்ள அருளூறு பூசனைப் பொருட்கள், முடிகயிறு ... முதலியவை அனுப்பப்படும்.

**<u>குறிப்பு-4</u>:-** இப்படி **'மக்கள் தொடர்பு'** ஏற்படுத்திக் கொண்டும், ஒவ்வொரு தனிமனிதர் வாழ்விலும் நமது குருபீடம், பதினெண்சித்தர் மடம், கருகுலம், வேதபாடசாலை ... நேரடியாக உதவி செய்து துன்பங்களையும், துயரங்களையும் துடைத்துக் காட்டுவதன் மூலம்தான் நமது கொள்கைகளுக்கும், குறிக்கோள்களுக்கும், செயல் திட்டங்களுக்கும் பொது மக்களிடையில் செல்வாக்கைத் தேடி

இ.ம.இ., இ.மு.க., அ.வி.தி., அருட்கோட்டம், வார வழிபாட்டு மன்றம், மடாதிபதி குழு ... முதலிய நிறுவன நிர்வாகங்களை மக்களிடையில் தோற்றுவித்து வளர்க்க முடியும், தோற்றுவித்து வளர்க்க முடியும், தோற்றுவித்து வளர்க்க முடியும்.

10.5. அதாவது நமது புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டையின் மூலம் நன்மையடையக் கூடிய மக்களையெல்லாம் ஒன்று திரட்டி **‘<u>சித்தர் கருவூறூர் அருட்கோட்டம்</u>’** என்ற பெயரில் அந்தந்த வட்டாரங்களில், கிராமங்களில், ஊர்களில், தெருக்களில் உள்ள கோயில் வளாகங்களில் அல்லது பொது இடங்களில் அல்லது தனியார் இடங்களில் யாகசாலை அமைத்து, விளக்கு மாடம் கட்டி, திரிசூலம் நட்டு, மெய்ஞ்ஞானக் கொடியேற்றி, வாரம் ஒரு நாள் யாகம் செய்து; அதன்மூலம், **<u>அருளை அநுபவப் பொருளாகவும், மருந்தாகவும், விருந்தாகவும்,</u>** அருளுலகப் பொருளுலகப் பாதுகாப்புச் சாதனமாகவும் பொதுமக்களுக்கு வழங்கிடல் வேண்டும். **<u>அப்பொழுதுதான் மக்களுக்கு நமது கொள்கை, குறிக்கோள், செயல்திட்டம் பற்றிய சிந்தனை வரும்</u>**.

10.6. புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டை மூலம் சேருபவர்களை சந்தித்து ஒன்று கூட்டி கலந்து பேசி அதில் வரலாறு, மொழி, இலக்கியம், கலை, ... முதலிய துறைகளில் ஆர்வமுள்ளவர்களை மட்டும் தனிப் பிரிவாக ஒன்று திரட்டி ‘<u>சித்தர் கருவூறூர் வார வழிபாட்டு மன்றம்</u>’ என்ற வார வழிபாட்டு மன்றத்தை உருவாக்கி அதன்மூலம் வாரம் ஒரு நாள் (அந்தந்த வட்டாரத்திலுள்ளவர்களுக்கு எந்தக் கிழமை வசதியோ அந்தக் கிழமை) இந்த மன்றம் இயங்கலாம். கூட்டு வழிபாடும், இலக்கியச் சொற்பொழிவும், பாட்டு நாட்டியம் கூத்து நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகளையும், பட்டிமன்றங்களையும், கருத்தரங்குகளையும், கவியரங்குகளையும், ஓவியப் போட்டிகளையும் நிகழ்த்தலாம், நிகழ்த்தலாம், நிகழ்த்தலாம். இதன்

மூலமே, அந்தந்த வட்டாரத்து மாணவர்களுக்கிடையில் கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, விளையாட்டுப் போட்டி (Sports and Games) உருவாக்கலாம்; உருவாக்கி மாணவர்களிடையில் புத்துணர்ச்சி ஊட்டலாம், நம்மைப் பற்றி அறிமுகப்படுத்தலாம்.

10.7. சித்தர் கருவூரர் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களை உருவாக்கலாம். அதாவது, புதிய இ.மு.க. உறுப்பினர் அட்டை பெற்றவர்களுக்கிடையிலே:-

(a) கோயில்களைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்ய வேண்டும்.

(b) கோயில்களில் உள்ள புல், பூண்டு, செடிகொடி, முட்புதர்கள், கற்கள், குப்பைகள் ... முதலியவற்றை அகற்றும் உழவாரப் பணி செய்தல்.

(c) மக்களிடையில் நிதிவசூல் செய்து கோயில்களில் உள்ள சிறுசிறு சிதைவுகளை, பாதிப்புக்களை, குறைகளை செப்பனிடுதல்.

(d) கோயில்களில் ஒரே ஒரு வேளையாவது முறையாக நிறைவான பூசை நிகழ்வதற்கு ஏற்பாடு செய்தல்.

(e) கோயில்களுக்கு அன்றாடம் பொதுமக்கள் காலை மாலை வேளைகளில் கூட்டமாக வந்து வழிபாடு செய்து கோயில்களைப் பயன்படுத்திக் கொள்ளும்படி செய்தல்.

(f) கோயில்களில் நின்று விட்ட, நிறுத்தப் பட்டுவிட்ட திருநாள்களையும், திருவிழாக்களையும் மீண்டும் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்தல்.

(g) கோயில்களில் நமக்கே உரிய கொட்டுமேள நாயன இசை வாரத்தின் சில நாட்களாவது அல்லது ஒரு நாளாவது ஒலிக்கும்படி செய்தல்.

(h) கோயில்களில் தேவாரம், திருவாசகம் முதலிய பத்திப் பாடல்கள், ஓதுவார் அல்லது தேசிகர் புதிதாக நியமிக்கவோ

அல்லது பழையவரை அழைத்து வந்து செயல்படச் செய்யவோ முயற்சிக்க வேண்டும் அல்லது பள்ளி ஆசிரியர்கள் யாரேனும் ஒருவரோ அல்லது பள்ளி மாணவ மாணவியர்களில் யாரேனும் ஒருவரோ அல்லது ஊர்ப் பொதுமக்களில் யாரேனும் ஒருவரோ **முறைபோட்டுக் கொண்டு** (வாரத்தின் 7 நாட்களில் ஒவ்வொரு கிழமைக்கும் ஒருவர் என்றோ அல்லது மாதத்தின் 30 தேதிகளில் ஒவ்வொரு நாளுக்கும் ஒருவர் என்றோ ஏற்பாடு செய்து) எப்படியாவது அன்றாடம் யாராவது ஒருவர் நமது கோயில்களில் பூசைநேரத்தில் பத்திப் பாடல்களைப் பாடியேயாக வேண்டும் என்ற செயல்திட்டத்தைக் கொண்டு வருதல் ....

என்றிப்படி நமது கோயில்கள் நன்கு விழிச்சியோடும், எழிச்சியோடும், மலர்ச்சியோடும், புதிய வளர்ச்சி நிலைகளைப் பெறுவதற்குரிய முயற்சிகளையும், பயிற்சிகளையும் மேற்கொள்வதுதான் இந்துமத ஆட்சிமீட்சிக்குரிய இ.மு.க.வின் செயல்திட்டமாகும்.

10.8. மேற்படி ஏழில் (10.7.) இ.மு.க.வின் செயல்திட்டமாகக் கூறப்பட்டுள்ள அனைத்துமே இ.ம.இ.யின் செயல்திட்டங்கள் போலவே காட்சியளிக்கும். ஆனால், இவையனைத்தும் இ.மு.க.வின் செயல்திட்டங்கள்தான். அதாவது, பதினெண்சித்தர்களுடைய இந்துமத வழிப்பயன்கள் அனைத்தும் இந்தக் கலியுகத்தில் இந்துமத இந்தியாவிற்குள் வந்திட்ட பிறமண்ணினரான பிருமணரால் மிகமிக நுட்பமாகவும், திட்பமாகவும், ஒட்பமாகவும், சூழ்ச்சியாகவும் செயல்பட முடியாத நிலைக்குக் கொண்டு வரப்பட்டு விட்டன. இப்பேருண்மையினை கடந்த (2000) இரண்டாயிரம் ஆண்டுகளுக்குள் இருபெரும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் (பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியான அமராவதியாற்றங்கரைக் கருவூரும், பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியான காவிரியாற்றங்கரைக் கருவூரும்) இரண்டரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக (அமராவதியாற்றங்கரைக்

கருவூரார் 251 ஆண்டுகள்; காவிரியாற்றங்கரைக் கருவூரார் 256 ஆண்டுகள்) மிகப் பெரிய பெரிய முயற்சிகளைச் செய்தும், மிகப் பெரிய பெரிய வெற்றிகளைப் பெற்றும் கூட இந்துவேதத்தையோ, இந்துமதத்தையோ காப்பாற்ற முடியவில்லை, காப்பாற்ற முடியவில்லை, காப்பாற்ற முடியவில்லை, காப்பாற்றவே முடியவில்லை. இதுதான் உண்மை, உண்மை, உண்மை.

எனவேதான், எந்தை (என் தந்தை) யாம், மூன்று மாதக் குழந்தையாக பால்குடிக்கும் சிசுவாக இருந்த போதே எம்மை எதிரிகள் அழித்து விடக் கூடாது என்பதற்காக தாய்ப்பாலோடு நவநஞ்சையும் கலந்து ஊட்டினார். அதுமட்டுமல்ல, நவநஞ்சை உண்டு யாம் தப்பிப் பிழைத்ததால்தான் யாம்தான் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் பெற்றுள்ளோம் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்.

அதனால், எம்மைக் கட்டாயமாகப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக எமது பிறந்த நேரம், கிழமை, நாள்(தேதி) முதலியவைகளைக் கூட (5) ஐந்து நாள் இடைவெளி இருக்கும்படிக் கூறிச் சென்றிட்டார். அதாவது, அக்டோபர் மாதம் 6 முதல் 10 வரை எமது பிறந்த நாள் என்று கூறிச் சென்றிட்டார். 6.10.1936 என்பது எம்முடைய கல்விக் குறிப்பேடுகளில் காணப்படுகிறது. 10.10.1936 என்பது அருளுலகக் குறிப்பேடுகளில் காணப்படுகிறது.

இது மட்டுமின்றி அவர் தமது உயிரை தனது உடலிலிருந்து வெளியேற்றிக் கொள்ளும் போது கூட; "மகனே, உனக்கு மிகுந்த ஆற்றல்கள் உண்டு, அவற்றைப் பயன்படுத்தி உன்னுடைய பிறந்த நாளைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு எந்த உண்மையையும் கண்டுபிடிக்க வேண்டாம். உன்னுடைய பிறந்தநாள் பற்றிய உண்மையில்தான் உன்னுடைய பாதுகாப்புகள் அனைத்தும்

இருக்கின்றன, எச்சரிக்கை" என்று கூறிச் சென்றதால்தான் யாம் இன்றுவரை அவருடைய ஆணையை மீறாமல் வாழுகிறோம்.

இதை இங்கு ஏன் குறிப்பிடுகிறோம் என்றால்; 'யானை நீராடிவிட்டுத் தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும்' என்பது போல இமயத்தின் முடிமுதல் தென் கோடிக் கன்னியாகுமரிக் கடல் வரை வாழுகின்ற இந்துமதம் இந்துக்களாலேயே மறக்கப்பட்டும், மறுக்கப்பட்டும், வெறுக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும், சீரழிக்கப்பட்டும், தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டும் ... தொடர்ந்து வீணாக்கப்பட்டு வருகிறது, தொடர்ந்து வீணாக்கப்பட்டு வருகிறது, தொடர்ந்து வீணாக்கப்பட்டே வருகிறது. எனவேதான், எம் காலத்திலாவது இந்துமதம் இந்துக்களால் முறையாகவும் நிறைவாகவும் தெரியப்பட்டும், புரியப்பட்டும், அறியப்பட்டும், ஆராயப்பட்டும், தெளிவாக உணரப்பட்டும், நம்பி ஏற்றுக் கொள்ளப்பட்டும், செயல்படுத்தப்பட்டும் இந்துக்கள் முழுமையான இந்துவேத இந்துமதப் பயன்களைத் துய்த்து உய்வு பெற வேண்டும் என்ற கருத்தோட்டத்தில் செயல்படுகிறோம் யாம்.

எனவேதான், இந்துமதத்துக்கென பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் செயல்பட்டது போலவே **'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' என்ற அமைப்பை தனிமனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும் இந்துவேதமும் இந்துமதமும் முழுமையாகப் பயன்படும்படிச் செய்யும் பணிக்காகவும்; 'இந்து முன்னேற்ற கழகம்' என்ற அமைப்பை, இந்துவேதமும் இந்துமதமும் இந்துக்களின் சமுதாய வாழ்விலும், அரசியல் வாழ்விலும் முழுமையாகப் பயன்படும்படிச் செய்யும் பணிக்காகவும் உருவாக்கியுள்ளோம். இந்த இருபெரும் தனித்தன்மை மிக்க அமைப்புக்களை மிக மிகத் தெளிவாக வேறுபடுத்தி, பிரித்து உணர்ந்தும், உணர்த்தியும்**

**செயல்படுவதைப் பொறுத்துத்தான் நமது வெற்றியும், வெற்றியின் பயனும் இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன**.

10.9. அதாவது ஏழாவது பிரிவில் (10.7.) கூறப்பட்டுள்ள செயல்திட்டங்கள் இ.ம.இ.யின் செயல்திட்டங்கள் போல இருந்தாலும்; அவை இ.மு.க.வின் செயல்திட்டங்கள்தான் என்பதை **தங்களைப் போன்று எம்மால் உருவாக்கப்படுகின்ற விரல்விட்டு எண்ணிடப்படக் கூடிய தனிமனிதர்களாவது முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம் யாம்**. இதற்குரிய அடிப்படை விளக்கம்தான் எட்டாவது பிரிவில் (10.8.) விளக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது எம்மைப் பொறுத்தவரை எமது தாத்தாக்கள் பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்றும் கூட அவர்களுடைய வாழ்நாளின் எல்லைக்குள்ளேயே அவர்களின் சாதனைகளும், போதனைகளும் மிகப்பெரிய வீழ்ச்சிகளையும், சிதைவு அழிவுகளையும் பெற நேரிட்டதற்குக் காரணமே இந்த இ.ம.இ., இ.மு.க. என்ற அமைப்புக்கள் இருவேறு தனித்தனி அமைப்புக்களாக கணிசமானவர்களால் கூடப் புரிந்து செயல்படுத்தப் படவில்லை, புரிந்து செயல்படுத்தப் படவில்லை, புரிந்து செயல்படுத்தப் படவில்லை என்பதுதான்.

எனவேதான் யாம் மிகவும் சிரமப்பட்டு, சிரமப்பட்டு மிகப் பெரிய பெரிய முயற்சிகளைச் செய்து <u>இந்த இரண்டு அமைப்புக்களும் வெவ்வேறானவை, இந்த இரண்டு அமைப்புக்களும் வெவ்வேறானவை, இந்த இரண்டு அமைப்புக்களும் வெவ்வேறானவை</u> என்ற பேருண்மையை உணர்த்துவதிலும், உணர்ந்து செயல்படுபவர்களை உணர்த்துவதிலுமே செலவிட்டு வருகிறோம். ஆனால்! ஆனால்!! ஆனால்!!! இன்னும் நம்மவர்களில் பெரும்பாலானவர்கள் இப்பேருண்மையினை உணர்ந்ததாகவும் தெரியவில்லை, ஒப்புக்

கொண்டதாகவும் தெரியவில்லை, ஏற்றுச் செயலாக்க முன்வந்ததாகவும் தெரியவில்லை.

எனவேதான், யாம், மிகவும் சிரமப்பட்டு இப்போது உருவாகியுள்ள நம்மவர்களுக்கிடையில் '<u>களையெடுக்கும் பணியை</u>' (To root out the ills and evils; the bad and venomous elements; disobedient, unruly wreck-outs) துவக்கி 'நமக்கு நோயையும் தீமையையும் தருபவர்களையும்', 'மிகவும் கேடும், நாசமும், மோசடியும், பிறருக்குத் தீமையே செய்யும் கோணல் சிந்தையையும், குறுகிய நெஞ்சையும் உடைய கொடிய நச்சுப் போக்குடையவர்களையும்', 'தலைமைக்குக் கட்டுப்படாத, சட்டதிட்ட ஒழுங்குமுறை விதிகளுக்குக் கட்டுப்படாத, எல்லாவகையான ஆக்கப்பூர்வமான வடிவமைப்புக்களையும், நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களையும், செயல்நிலைகளையும் சூழ்ச்சியாக முரட்டுத்தனமாக சிதைப்பதிலேயே கண்ணும் கருத்தும் உடைய கயவர்களையும்', அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தாவின் திருவுளக் கருத்தையும், ஒப்புதலையும் பெற்றே நம்மை விட்டு விலக்கியும், தூக்கியெறிந்தும் செயல்படுகிறோம் யாம்.

எனவே, நம்மால் களையெடுக்கப் பட்டவர்கள் எல்லாம் என்றைக்குமே ஓர் எதிர்ப்பு அணியாக உருவாக முடியாது, உருவாக முடியாது, உருவாக முடியாது, உருவாகவே முடியாது. ஏனென்றால், எம்மால் களையெடுக்கப்பட்ட அனைவருமே, **'யாரோடும் ஒத்துப்போக முடியாதவர்களாகவும், எதையுமே சரியாகச் செய்யத் தெரியாதவர்களாகவும், தன்னல வெறியர்களாகவும், பேராசைக் காரர்களாகவும், அகம்பாவக் காரர்களாகவும், ஆணவக் காரர்களாகவும், சுயநலப் போக்கும் நோக்கும் உடையவர்களாகவும் இருப்பவர்கள்தான், இருப்பவர்கள்தான், இருப்பவர்கள்தான்'.** இவற்றால்தான் எம்மால் களையெடுக்கப் பட்டவர்கள் உதிர்ந்த

உலர்ந்த சருகுகளாகி விடுகிறுர்கள். இதை உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படத் தங்களைப் போன்றவர்கள் முன்வர வேண்டும்.

10.10. **நமது இந்துமதத்தின் இயலாமை நிலைகள்:-**

(a) நமது இந்துக்களில் யாரும் நமது மதத்திற்கென்று இந்துவேதம் என்ற ஒன்று இருப்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கத் தயாராகவில்லை, தயாராகவில்லை, தயாராகவில்லை.

(b) நமது இந்துமதத் தலைவர்கள், ஆச்சாரியார்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள், சன்னிதானங்கள், ஆதீனங்கள், பண்டாரங்கள், புராண இதிகாசச் சொற்பொழிவாளர்கள் ... முதலியவர்களில் யாருமே **'இந்துவேதம்'** என்ற சொல்லை சொல்லக் கூடத் தயாராக இல்லை. இன்னும் சொல்லப் போனுல், இன்றுவரை இதுதான் நமது இந்துவேதம் என்று யாருமே புத்தகம் அச்சிடத் தயாராக இல்லை, புத்தகம் அச்சிடத் தயாராக இல்லை, புத்தகம் அச்சிடத் தயாராக இல்லை.

(c) இந்துமதம், ஹிந்துமதம் என்ற இருவேறு மதங்கள் இருப்பதைப் பற்றி எவ்வளவோ எடுத்துக் கூறியும் கூட எவருமே ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை, ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை, ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இந்துமதக் கடவுள்களில் இருவேறு வகைப்பட்ட முரண்பாடுகளை உடைய தனித்தன்மை பெற்ற கடவுள்கள் ஏன் இருக்கிறுர்கள் என்பது பற்றி எவருமே சிந்திக்கத் தயாராக இல்லை.

(d) இமயம் முதல் குமரி வரை உள்ள பல்வேறு மாநிலங்களில் எந்த மாநிலத்திலுமே ஆட்சிமொழியாகவோ அல்லது பேச்சு மொழியாகவோ இல்லாத ஒரு மொழியான சமசுக்கிருத மொழி எப்படி? ஏன்? எதற்காக? எவ்வாறு? எப்பொழுதிருந்து?

இந்துமதத்தின் ஆட்சிமொழியாக்கப்பட்டது? இந்துமதத்தின் பூசைமொழியாக்கப்பட்டது? இந்துமதத்தின் சடங்கியல் மொழியாக்கப் பட்டது? இந்துமதத்தின் வேத மொழியாக்கப்பட்டது? ... என்ற வினாக்களைக் கடந்த இரண்டாயிரம் (2000) ஆண்டுகளாக ஆர்ப்பரித்துக் கொந்தளிக்கும் கடலலை போல் தொடர்ந்து எழுப்பி வந்தும் கூட எவருடைய காதிலும் இக்கேள்விகள் விழவில்லை, விழவில்லை, விழவில்லை. அதாவது, இவை பற்றி எவருமே சிந்திக்கத் தயாராகவில்லை! எவருமே சிந்திக்கத் தயாராகவில்லை! எவருமே சிந்திக்கத் தயாராகவில்லை!

(e) இந்த உலகிலேயே இந்துமதத்தில் மட்டும்தான் தனிமனித விருப்பக் கடவுள்கள், குடும்ப வழிபாட்டிற்குரிய ஆண்டவர்கள், குலத்தாரின் வழிபாட்டுக்குரிய குலதெய்வங்கள், கிராமத்தாரின் வழிபாட்டுக்குரிய கிராமத் தேவர்களும், தேவதைகளும், நாட்டுப் பொதுமக்களின் வழிபாட்டுக்குரிய கடவுள்களும் என்று பல்வேறு வகைப்பட்ட வழிபாட்டுக்குரிய கடவுள்கள் இருப்பது ஏன்? ஏன்? ஏன்?

(f) இந்துமதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் வீடுதோறும், தெருக்கள் தோறும், கடவுள்களோடு நெருங்கிய தொடர்புகளையுடைய அருளாளர்களும், அருளாளிகளும், அருளாடு நாயகங்களும், மருளாளர்களும், மருளாளிகளும், மருளாடு நாயகங்களும், குறி காரர்களும், சோதிடக் காரர்களும், கனா சித்தியாளர்களும், அருள்வாக்குச் சித்தியாளர்களும் தொடர்ந்து காலங்கள் தோறும் தோன்றிக் கொண்டேதான் இருக்கிறார்கள். இதன் சிறப்பு என்ன? அரிய பயன் என்ன? தனித்தன்மை என்ன? என்பது பற்றி கடந்த (2000) இரண்டாயிரம் ஆண்டுகளாக எவ்வளவோ எடுத்துக்

கூறியும் கூட, எவருமே ஏற்றுச் சிந்திக்க முன்வரத் தயாராகாதது ஏன்?

(g) நம் நாட்டுக்குரிய மயில் தோகைகளை (பீலி) வைத்துக் கொண்டு மந்திரித்து அருள்நலம் வழங்கும் பழக்கம் ஏன் நமது கோயில்களில் இல்லாமல் போய்விட்டது?

(h) நம் நாட்டிற்கே உரிய உடுக்கை, உருமி, பம்பை, பறை, பரப்பை, கிடுமுட்டி, கொம்பு, வளை, தாரை, தப்பட்டை, சங்கு, சிலம்பு, கிண்ணரம், நையாண்டி... முதலிய இசைக்கருவிகள் ஏன் நமது பெரிய பெரிய இந்துக் கோயில்களிலும், இந்து விழாக்களிலும் புறக்கணிக்கப் பட்டுவிட்டன? ஏன் ஒதுக்கப் பட்டுவிட்டன? ஏன் மறக்கப் பட்டுவிட்டன? ஏன் மறுக்கப் பட்டுவிட்டன? ஏன் எதிர்க்கப் படுகின்றன?

(i) நமது கோயில்களில், சின்னஞ்சிறு கோயில்கள் தவிர பெரியபெரிய கோயிலில் உள்ள பூசாறிகள், அருட்சினையாளர்கள், குருக்கள்கள், பட்டர்கள், பட்டாச்சாரியார்கள், பண்டாரங்கள், ... முதலியவர்கள் ஏன் மக்களுக்கு மந்திரிப்பதில்லை? ஏன் திருநீறு, குங்குமம், சந்தனம் பூசி விடுவதில்லை? ... ???

(j) நமது சன்னிதானங்கள் திரிசூலம், மயில்பீலி, மெய்ஞ்ஞானக் கொடியுடன் பெரியபெரிய கோயில்களுக்குப் போனாலும் சரி, சிறியசிறிய கோயில்களுக்குப் போனாலும் சரி யாராலும் வரவேற்கப் படுவதில்லை, யாராலும் வரவேற்கப் படுவதில்லை, யாராலும் வரவேற்கப் படுவதில்லை. ஏன்?! ஏன்??!! ஏன் ???!!!

(k) குமரிமுனை முதல் இமயத்தின் முடிவரை உள்ள சிவன் கோயில்கள் இடிந்தும், இருளடைந்தும், சிதைந்தும், சீரழிந்தும் பாழ்பட்டுக் கிடப்பது ஏன்? பயனற்றுக் கிடப்பது ஏன்?

(I) எண்ணற்ற கோயில்களும், எண்ணற்ற விழாக்களும் கணக்கற்ற திருநாள்களும், வகைவகையான சடங்குகளும் ... இருந்தும் கூட இந்துக்கள் என்ற மத உணர்வோ, ஒற்றுமையுணர்வோ, ஒருமைப்பாட்டுணர்வோ இல்லாமல்; இந்துக்கள் கணிசமான சாதிகளின் பெயர்களால் கணக்கற்ற வேற்றுமைகளேயும், பிரிவினைகளேயும், உயர்வு தாழ்வுகளேயும், தீண்டாமைகளேயும், போட்டா போட்டிச் சண்டை சச்சரவுகளேயும் காத்து வளர்த்துக் கொண்டிருப்பது ஏன்? காத்து வளர்த்துக் கொண்டிருப்பது ஏன்? காத்து வளர்த்துக் கொண்டிருப்பது ஏன்? ... ஏன்? ஏன்? ஏன்? ... எதற்காக? எதற்காக? எதற்காக? எவ்வளவு காலமாக? எவ்வளவு காலமாக? எவ்வளவு காலமாக? ...

... ... ... ... ... ... ... ...

எனப்படுகின்ற மேற்படி வினுக்களுக்கெல்லாம் விடை கண்டுபிடித்து; அவற்றின் மூலம் இந்துமதத்தை மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், வலிமைச் செழிச்சியும், விழிச்சி மிகு எழிச்சியும், ஆட்சிமீட்சியும், ... அடையச் செய்ய வேண்டுமென்ருல் இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்ற அமைப்பும், இந்து முன்னேற்றக் கழகம் என்ற மற்ருேர் அமைப்பும் உருவாக்கப்பட்டுத் தனித்தனியாகச் செயல்பட்டேயாக வேண்டும்; உருவாக்கப்பட்டுத் தனித்தனியாகச் செயல்பட்டேயாக வேண்டும்; உருவாக்கப்பட்டுத் தனித்தனியாகச் செயல்பட்டேயாக வேண்டும்.

10.11. மேலே பத்தாவது பிரிவில் (10.10.) இந்துமதத்தின் இயலாமைகளேக் குறிப்பிட்டு, இ.ம.இ.யும், இ.மு.க.வும் இருவேறுபட்ட தனித்தனி பிரிவுகளாகச் செயல்பட்டேயாக வேண்டும் என்பதை விளக்கினேம். இவற்றை நீ நினேவில் கொண்டிட்டால் ‘சித்தர் கருவூரர் அருட்கோட்டம்’, ‘சித்தர் கருவூரர் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம்’ ... என்பவை பற்றியும், இவை தொடர்பான

அமைப்புக்கள் பற்றியும், இந்த அமைப்புக்களின் செயல்நிலைகள் பற்றியும் புரிந்து கொள்வது உனக்கு சுலபமாக இருக்கும். ஏனென்றால் இவைதான் இந்து மறுமலர்ச்சி இயக்கம். இந்த இ.ம.இ.யின் செயல்வீரர்களுடைய சன்னிதான உடை, திரிசூலம், மயில்பீலி, மெய்ஞ்ஞானக்கொடி, உருத்திராக்க மாலைகள், அக்குமணிமாலைகள், தாயத்துக்கள், முடிகயிறுகள், சக்கரங்கள், பூசைகள், மந்திரிக்கும் பணிகள், அருள்வாக்கு, அருட்கணிப்புப் பணிகள் ... முதலியவைகளின் ஆற்றல்களும், செயல்நிலைகளும், செயல்நிலையங்களும் உங்களுக்குப் புரியவில்லை, புரியவில்லை, புரியவில்லை, புரியவேயில்லை. இவற்றைப் புரிந்து கொள்ள தாங்கள் முயலவில்லை, முயலவில்லை, முயலவில்லை, முயலவேயில்லை.

ஆனால், **தாங்களோ மேற்படி இ.ம.இ.யின் செயல்நிலைகளின் மூலமும், செயல்நிலையங்களின் மூலமும், செயல்வீரத் தோற்றங்களின் மூலமும் அவ்வப்போது சமுதாயத்தில் கிடைக்கக் கூடிய புகழுக்கும், வசதிவாய்ப்புகளுக்கும் ஏங்கி ஏங்கித் தவறு செய்கிறீர்கள், ஏங்கி ஏங்கித் தவறு செய்கிறீர்கள், ஏங்கி ஏங்கித் தவறு செய்கிறீர்கள். ஆனால், சமுதாய அரசியல் பதவிகள் வேண்டுமென்று ஆசைப்பட்டுத் தாங்களோ இ.மு.க.வில் சேர்ந்துள்ளீர்கள். இந்த ஊசலாட்டத்தால் பல குழப்பங்கள் விளைந்துவிட்டன, பல தவறுகள் நிகழ்ந்து விட்டன, பலரின் எதிர்ப்புகள் உருவாகிவிட்டன, சில குற்றச்சாட்டுக்களும் வன்மையாக எழுப்பப்பட்டு விட்டன**. எனவே, தங்களைத் திருத்துவதற்காக ஒருசில சின்ன தடைகள் மட்டும் விதித்து; தங்களை இ.மு.க. செயல்வீரராகச் செயல்பட அனுமதித்திருக்கிறோம்.

**குறிப்பு:-** ... ... ... ...

(a) இதே அஞ்சலிலும் சரி, ஏற்கனவே நம்மவர்களுடனும் சரி தாங்கள் பெரியார் மாவட்டத்தில் இ.மு.க. மாநாட்டுச் சிறப்பு

அமைப்பாளராகச் செயல்படலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், அண்மையில் வந்த செய்திகளும், குற்றச்சாட்டுகளும் உங்களை பெரியார் மாவட்டத்திற்குள்ளும் செயல்படக் கூடாது என்று அறிவிக்கும்படிச் செய்துவிட்டது. இதைப் புரிந்து செயல்படுங்கள்.

(b) தாங்கள் இந்தத் தடைவிதிப்பிற்காக அனுவசியமாக வருத்தப்படத் தேவையில்லை. கவலைப்படத் தேவையில்லை. **உங்களை இந்துமத ஆட்சி மீட்சிக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம் யாம்**.

(c) நடக்கவிருக்கின்ற அருட்போரும், அருளாட்சி அமைப்புப் பணியும் மூவாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் விடுவிப்பதற்காகச் செய்யப்படும் மாபெரும் முயற்சிகளே ஆகும். இந்த மாபெரும் முயற்சியில் எல்லாவகையான தரங்களுக்கும், திரங்களுக்கும், குற்றங்களுக்கும், குறைகளுக்கும், முரண்பாடுகளுக்கும், வேறுபாடுகளுக்கும், ... இடையில் '**இந்துவேத இந்துமத விடுதலைப் போர்**' என்ற முயற்சியின் வலிமையான கயிறு அனைத்தையும் பின்னிப் பிணைக்கின்ற வேலையைச் செய்கிறது. இதன்படிதான் எவருடைய குற்றங்குறைகளையும், தவறுகளையும் பெரிதுபடுத்தாமல் அனைவரையும் ஒன்று திரட்டி ஒற்றுமைப்படுத்தி ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டுமென்ற பெரு நோக்கோடும், பொது நலப் போக்கோடும் செயல்படுகிறோம் யாம். அதாவது யாம் யாரையும் பிறர் பேச்சைக் கேட்டுக் கொண்டு கண்டிப்பதாகவோ, தண்டிப்பதாகவோ நினைத்து விடக் கூடாது, எச்சரிக்கை.

(d) இரத்தினஞ் செட்டியார் மகன் கங்காதரக் குமார் அவர்களே! நாம் வாழுகின்ற சமுதாயத்தில் நாம் எதிர்பார்க்கின்ற பக்குவங்களும்,

திறமைகளும், தயார் நிலைகளும், உண்மையும், வீரதீரமும், ஈக தியாகமும், தலைமையை மதித்தலும், விதிகளுக்குக் கட்டுப்படலும், நேர்மையும் உடைய மனிதர்கள் மிகமிகச் சிலரேயாவர். ஆனால் அருட்போருக்கும், அருளாட்சிக்கும் ஏராளமானவர்கள் தேவை. எனவேதான், எல்லா வகைப்பட்ட கறைகளையும், குறைகளையும் உடைய மனிதர்கள்தான் மிகுதியாக நமது சமுதாயத்தின் அங்கங்களாக இருக்கிறார்கள் என்ற பேருண்மையை மிகத் தெளிவாக உணர்ந்துதான் அனைவரையும் ஒருங்கிணைத்துச் செயல்பட முற்பட்டிருக்கிறோம் யாம். எனவேதான், தாங்கள் தங்களால் முடிந்தவரை எப்படி இ.மு.க. செயல்வீரராகச் செயல்பட வேண்டும் என்பதை விளக்குவதற்காக வேலைகள் மிகுந்த இந்த நேரத்தில், ஓய்வு கிடைக்காத இந்த நேரத்தில் உங்களுக்கென ஓய்வு எடுக்க வேண்டிய நள்ளிரவையும், நண்பகலையும் செலவழித்து இந்த நெடிய அஞ்சல் எழுதப்படுகிறது.

<u>**குறிப்பு:-**</u> இதுவரை தங்களுக்கு அனுப்பப்பட்ட நெடிய அஞ்சல்களுக்கு நகல்கள் இல்லை. ஏறத்தாழ எந்த அஞ்சலையும் எவருக்கும் குருவாணைப்படி படித்துக் காட்டவில்லை, தாங்கள். எனவேதான், இந்த அஞ்சலை தங்களுக்கு இ.ம.இ.யின் மேற்கு மண்டலச் செயலாளர், சித்தர் மகன், சித்தரடியார், அருள்மிகு சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானம், குருமார் வெங்கடேசன் M.A., B.L., மூலம் படித்துக் காட்டப்படுகிறது. இதற்கு நகல் வேண்டுமென்றால், இயந்திர நகல் (xerox copy) எடுப்பதற்குரிய செலவை ஏற்றுக் கொண்டால் இதன் நகலை அவரே தயாரித்துத் தருவார். இதைத் தவறாகக் கருத வேண்டாம். தாங்கள் தங்களின் குடும்பச் சூழ்நிலையும், தொழில் சூழ்நிலையும் எப்படியிருக்கின்றன என்று ஆராய்ந்து தொடர்ந்து இ.மு.க.வில் செயல்படுங்கள். அது பற்றிய தங்கள் முடிவை உடனே எழுதுங்கள்.

10.12.1. **<u>பதினெண்சித்தர் மடாதிபதி குழு:-</u>**

தாங்களும், தங்களைப் போன்றவர்களும் இ.ம.இ.யின் அ.வி.தி. பணியில்லாமல் எப்படி இ.மு.க. பணியாற்றுவது என்று எண்ணித் தயங்கி மயங்கியிருக்கிறீர்கள். இதற்குக் காரணம் இ.மு.க.வின் மூலம் இந்துமதத் தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும் எப்படி மக்களிடையில் அநுபவப் பொருளாக வழங்குவது என்பது பற்றி சிந்திக்காததுதான். அதுவும் **<u>"அருட்போரின் ஆயத்தப் பணிகள் ஆரம்பமாகி விட்டன, துவக்கப்பட்டு விட்டன"</u>** <u>என்று அருளாட்சி நாயகமே அறிவித்த பிறகும் நம்மவர்கள் சமுதாய அரசியல் துறைகளுக்கென உருவாக்கப்பட்டுள்ள இ.மு.க.வை இந்துமத வழியில் வளர்ப்பது எப்படி? என்பது தெரியாமலேயே இருந்து விடக் கூடாது, இருந்து விடக் கூடாது, இருந்து விடக் கூடாது. எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை.</u>

இது பற்றி, அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தாவிடம் கேட்டபோதுதான் **அறிவிக்கை எண் 7777ஐ அருட்போர் ஆயத்தப் பணியின் மிகச் சிறந்த சாதனம்** என்று சொல்லி வழங்கினர். எனவே, அருட்போரின் ஆயத்தப் பணிகளை முழுக்க முழுக்கச் செய்ய வேண்டிய பொறுப்பிலிருக்கின்ற இ.மு.க.வினர்தான், இந்த அறிவிக்கை எண் 7777இல் உள்ள இந்துவேதக் கருத்துக்களையும், கொள்கைகளையும், குறிக்கோள்களையும், தத்துவ உயிரோட்டங்களையும், வேதநெறி தேரோட்டங்களையும் இந்துமதச் செயல்சித்தாந்த நடைமுறைகளையும் முறையாக விளக்கியுரைத்து நிறைவாகச் செயலாக்க வேண்டும், முறையாக விளக்கியுரைத்து நிறைவாகச் செயலாக்க வேண்டும், முறையாக விளக்கியுரைத்து நிறைவாகச் செயலாக்க வேண்டும்.

எனவே, இந்த அஞ்சலில் தங்களுக்கு அறிவிக்கை எண் 7777 பற்றிய விளக்கங்களை வழங்குவதன் மூலம் நம்மவர்கள் அனைவருக்கும் வழங்கும் பணி நிகழ்த்தப்படுகிறது. ஆனால், இந்த 7777 அறிவிக்கை ஒரு நூறாயிரத்திற்கு மேல் (ஓர் இலட்சம்) அவசர அவசியமாக அச்சடிக்கப்பட்டு நாடு முழுவதும் அனுப்பப்பட்டது தங்களுக்குத் தெரியும். தங்களுக்குத் தெரியாத ஒன்று என்னவென்றால், தங்களைத் தவிர இ.மு.க.வின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களும், பேரார்வமிக்க இ.மு.க. செயல்வீரர்களும் இந்த அறிவிக்கை எண் 7777இல் உள்ள **பதினெண்சித்தர் மடாதிபதி குழுவை** எப்படி அமைப்பது? எவ்வாறு செயலாக்குவது? இதன்மூலம் என்னென்ன சாதனைகளைச் சாதிக்கலாம்? இக்குழு அமைக்கும் பணி இ.ம.இ.யின் பணியா? இ.மு.க.வின் பணியா? என்பது போன்ற வினாக்களை எழுப்பி உடனுக்குடன் உரிய விடைகளைப் பெற்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான்.

எனவேதான், இந்த அஞ்சலில் பதினெண்சித்தர் மடாதிபதி குழுவின் தத்துவத்தையும், செயல்சித்தாந்தத்தையும் மிகமிகச் சுருக்கமாக விளக்க முற்படுகிறோம் யாம். இதற்கு மேலும் விளக்கம் தேவையென்றால்; ஏற்கனவே பதினெண்சித்தர் மடாதிபதி குழுவை உருவாக்கும் பணியிலும், செயலாக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ள பொறுப்புள்ள இ.மு.க. தலைவர்களையும், செயலாளர்களையும் சந்தித்து விளக்கம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இதற்காகத் தலைமைப் பீடத்திற்கு அனாவசியமாக ஓடி வரத் தேவையில்லை. தங்களுக்கு எந்த அடிப்படையிலும் அனாவசியமான பொருட்செலவு கூடாது. தங்களுடைய தொழிலிலிருந்து அனாவசியமான திசைதிருப்பல்களோ, கால வீணாக்கல்களோ ஏற்பட்டு விடக் கூடாது என்ற கருத்தோட்டத்தில்தான் தங்களுக்கு இந்த நெடிய அஞ்சல் எழுதப்படுகிறது.

10.12.2. **<u>பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவின் சிறப்பு</u>**:-

இம்மண்ணுலகில் ஆதிசிவனுருக்கு அடுத்து தோன்றிய பதினேரு பதினெண்சித்தர் பீடாதிபதிகள்தான் தங்கள் தங்கள் காலத்தில் இந்தப் பதினெண்சித்தர் மடாதிபதி குழுவைத் தோற்றுவித்து இம்மண்ணுலகில் 1. மடாதிபதி, 2. பீடாதிபதி, 3. சன்னிதானம், 4. ஆதீனம், 5. தம்பிரான், 6. பண்டாரம், 7. பண்டார சந்நதி, 8. பண்டார சந்நிதி, 9. அரியவாள், 10. கூரியவாள், 11. சீரியவாள், 12. பெரியவாள், 13. நேரியவாள், 14. வீரியவாள், 15. ஏமகோடிப் பீடம், 16. காமகோடிப் பீடம், 17. சோமகோடிப் பீடம், 18. வாமகோடிப் பீடம் ... என்று பதினெட்டுப் பட்டங்களுக்குரியவர் இந்துமத இந்தியாவின் ஏதேனும் ஒரு மூலை முடுக்கிலாவது வாழும்படி செய்துள்ளார்கள்.

அதாவது, பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதிகள் தோன்றும் போதுதான் பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவில் உள்ள பதினெட்டு அருட்பட்டத்தவர்களும் தோற்றுவிக்கப்படுகின்ற பணிகள் நிகழுகின்றன. எனவே, கடந்த நான்கு யுகத்தில் இந்த பதினேரு பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தவிர; ஆரம்பக் காலத்தில் ஆதிசிவனுர் தோற்றுவித்தது போல் பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவிற்குரிய பதினெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்தவர்களையும் வேறு யாரும் உருவாக்கியதில்லை, உருவாக்கியதில்லை, உருவாக்கியதில்லை. உருவாக்க முடியவில்லை, உருவாக்க முடியவில்லை, உருவாக்க முடியவில்லை என்பதுதான் உண்மை, உண்மை, உண்மை.

எனவேதான், **தமிழர்களாக உள்ள பதினெண்சித்தர்கள் உருவாக்கிய இந்துமதத்திற்கு பதினெண்சித்தர் பீடாதிபதிகளாகத் தோன்றுபவர்கள் மட்டுமே இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், குவலய குருபீடம், அனாதி ஆதி கடந்த தம்பிரான், கருவறை**

**மூலவர்களின் அம்மையப்பர், ... எனப்படுகின்ற (192) நூற்றுத் தொண்ணூற்றிரண்டு அருட்பட்டங்களுக்கு உரியவராகிருர்கள், அருட்பட்டங்களுக்கு உரியவராகிருர்கள், அருட்பட்டங்களுக்கு உரியவராகிருர்கள்**. இவற்றில் எந்த ஓர் அருட்பட்டத்தையும் இந்துமதத்தின் பெயரால் வாழும் எந்த ஒரு மடாதிபதியோ, பீடாதிபதியோ, ஆச்சாரியாரோ, சன்னிதானமோ, ஆதீனமோ, தம்பிராஞே, பண்டாரமோ, ... அடுத்தவருக்கு வழங்க முடியாது, வழங்க முடியாது, வழங்க முடியாது, வழங்கவே முடியாது. ஏனென்ருல், இன்றைக்கு இந்துமதத்திலுள்ள மேற்படி பட்டத்துக்குரிய அனைவருமே ஏதாவது ஒரு பதினெண்சித்தர் பீடாதிபதியால் உருவாக்கப்பட்டவர்களே தவிர, வேறு அல்ல.

இவற்ருல்தான், அதாவது இப்பேருண்மைகளால்தான்,

(1) இந்துவேதத்துக்கும், இந்துமதத்துக்கும் பிறப்பிடமும், இருப்பிடமும், காப்பிடமும் தமிழகம்தான், தமிழகம்தான், தமிழகம்தான்.

(2) இந்துவேத வித்துக்களும், சொத்துக்களும் தமிழர்கள்தான், தமிழர்கள்தான், தமிழர்கள்தான்.

(3) இந்துமதத்தின் மூலவர்களும், காவலர்களும், நாயகர்களும், வாரிசுகளும் தமிழர்கள்தான், தமிழர்கள்தான், தமிழர்கள்தான்.

(4) தமிழர்களின் உள்ளங்களும், இல்லங்களும்தான் அருளுலக நாற்றங்கால்கள், நாற்றுப் பண்ணைகள், விதைப் பண்ணைகள்.

(5) பதினெண்சித்தர்களின் தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான் இந்துமத ஆட்சிமொழி, இந்துமத ஆட்சிமொழி, இந்துமத ஆட்சிமொழி.

(6) பதினெண்சித்தர்களின் தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான் இந்து வேதம் எழுதப்பட்ட வேதமொழி.

(7) பதினெண்சித்தர்களின் தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான் இந்துமதத் தேவர்களும், தேவதைகளும் பேசும் தேவமொழி, இந்துமதத் தெய்வங்கள் பேசும் தெய்வ மொழி, இந்துமதக் கடவுளர்கள் பேசும் கடவுள் மொழி, இந்துமத ஆண்டவர்கள் பேசும் ஆண்டவர் மொழி, இந்துமத அமரர்கள் பேசும் அமரர் மொழி, ... என்று நாற்பத்தெட்டு வகைக்கும் மேற்பட்ட சொற்களால் சிறப்பாக விளக்கியுரைக்கப்படும் அருளுலக மொழி, அருளுலக ஆட்சிமொழி; அருளுலகில் பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைத் தருகின்ற ஒரே ஓர் ஒப்புயர்வற்ற மொழி.

(8) பதினெண்சித்தர்களின் தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான; அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான் அருளுலக இருள்களையும், இன்னல்களையும், இடர்களையும், இடுக்கண்களையும், நடுக்கங்களையும், ஏக்கங்களையும், ஏமாற்றங்களையும், அச்ச கூச்ச மாச்சரியங்களையும், பயங்களையும் அகற்றித் தரும், அகற்றித் தரும், அகற்றித் தரும்.

(9) பதினெண்சித்தர்களின் தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான் பொருளுலக வறுமைகளையும், வெறுமைகளையும், இல்லாமைகளையும், இயலாமைகளையும் இறந்தொழியச் செய்திடும், இறந்தொழியச் செய்திடும், இறந்தொழியச் செய்திடும்.

(10) பதினெண்சித்தர்களின் தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் இந்த மண்ணுலகுக்குரிய, இந்த மண்ணுலகில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற 108 வகை திருப்பதிச் சக்கரங்களும், 243 வகைச் சத்திபீடச் சக்கரங்களும், 1008 வகைச் சீவாலயச் சக்கரங்களும் எழுதப்பட்டிருக்கின்றன, எழுதப்பட்டிருக்கின்றன, எழுதப்பட்டிருக்கின்றன; எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன, எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன, எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன; எழுதப்படப் போகின்றன, எழுதப்படப் போகின்றன, எழுதப்படப் போகின்றன. அதாவது, அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் இந்த மண்ணுலகுக்குரிய ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தொன்பது (1359) வகைப்பட்ட சக்கரங்களும் எழுதப்பட முடியும், எழுதப்பட முடியும், எழுதப்பட முடியும்.

... விரிவஞ்சி தமிழ்மொழியின் சிறப்பு கூறும் எண்ணற்ற குருபாரம்பரிய வாசகங்களில் இந்தப் பத்து வாசகங்களோடு நிறைவு செய்து கொண்டு அஞ்சலைத் தொடருகிறோம்.

இப்படி பதினெண்சித்தர்களுடைய தாய்மொழியான தமிழ்மொழியின் பெருமைகளைக் கூறுவதன் மூலம் இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் பதினெண்சித்தர்களே தலைவர்கள், காவலர்கள், மூலவர்கள், நாயகர்கள் என்ற பேருண்மை தெள்ளத்தெளிவாக நிலைநாட்டப்படுகிறது.

10.12.3. அதாவது இந்துவேத நாயகமாகவும், இந்துமதத் தந்தையாகவும், இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவராகவும் விளங்குகின்ற பதினெண்சித்தர் பீடாதிபதிகளால்தான் அருளுலகைப் பாதுகாக்கக் கூடிய, நிலைநிறுத்தக் கூடிய; முறையாகவும், நிறைவாகவும் செயல்படச் செய்கின்ற பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவிற்குரிய பதினெட்டுவகை

அருட்பட்டத்தவர்களையும் உருவாக்க முடியும், உருவாக்க முடியும், உருவாக்க முடியும் என்ற பேருண்மை நிலைநாட்டப்படுகிறது. ஏனென்றால், இந்த பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவிற்குரிய பதினெட்டுப் பேர்கள்தான் நாட்டுநடப்பில் கோவில் (கோயில்) என்ற ஒரு பொதுச் சொல்லால் குறிப்பிடக் கூடிய அனைத்து வகைப்பட்ட கடவுள்களின் வாழிடங்களையும் பாதுகாத்து பத்தி, சத்தி, சித்தி, முத்தி முதலியவைகளை வளர்க்கும்படி செய்ய முடியும்.

எனவேதான், கடந்த நான்கு யுகங்களில் முதன்முதலில் ஆதிசிவனார் உருவாக்கிய மடாதிபதிக் குழுவை என்றென்றும் நிலைநிறுத்திச் செயல்பட வேண்டும் என்பதற்காக அவருக்கு அடுத்துத் தோன்றிய **சித்தர் கருவூறார் வழிவந்த** பதினோரு பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் இந்தப் பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவிற்குரிய பதினெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்தவர்களையும் நூறாயிரக்கணக்கில் தோற்றுவித்துக் கொண்டே வந்துள்ளார்கள். இருந்தும், இன்றைக்கு நாட்டில் இந்தப் பதினெட்டு வகை அருட்பட்டத்தவர்களில் ஒரு சில அருட்பட்டத்துக்குரியவர்கள் மட்டுமே (மடாதிபதி, பீடாதிபதி, சன்னிதானம், ஆதீனம், தம்பிரான், ஆச்சாரியார் . . .) உலகறிய வாழுகிறார்கள். கணிசமான எண்ணிக்கைக்குரிய பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவைச் சேர்ந்த அருட்பட்டத்தவர்கள் இலைமறை காயாக காடுகளிலும், குகைகளிலும், மலைமுகடுகளிலும் மறைந்து உறைந்து வருகிறார்கள். எனவேதான், **இப்போது அருட்போர் ஆயத்தப் பணிகள் துவங்கி விட்டதால் (ஆரம்பித்து விட்டதால்); அதனுடைய சிறந்த செயல்பாட்டுச் சாதனமாக பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவை நாடெங்கும் உருவாக்குமாறு அருளாட்சி நாயகமான அண்டபேரண்ட அருட்பேரரசர் தஞ்சைத் தாத்தா அவர்கள் அருளாணை**

**வழங்கியிருக்கிறுர்கள். எனவேதான், பதினெண்சித்தர் மடாதிபதி குழுவை நாடெங்கும் அமைக்கும் பணி இ.மு.க.வின் முழுமுதல் செயல்திட்டமாக அறிவிக்கப் பட்டிருக்கிறது.**

10.12.4. **பதினெண்சித்தர் மடாதிபதி குழுவும், இ.மு.க.வின் செயல்நிலேயும்:**

1) இந்து முன்னேற்றக் கழகம்தான் அருட்போருக்குரிய படைகளைத் திரட்ட வேண்டும்; திரட்டப்படும் படைக்கு அருட்போர் பயிற்சிகளை வழங்கும் பாடி வீடுகளை நாடெங்கும் உரிய இடங்களைத் தேர்ந்தெடுத்து பெரிய அளவில் உருவாக்க வேண்டும். அதை அடுத்து அருட்போர் நிகழ்த்தும் காலத்து பயன்படக் கூடிய பாசறைகளை இப்பொழுதிருந்தே தேர்ந்தெடுத்து பாசறைகளை வடிவமைப்புச் செய்ய வேண்டும். இவற்றிற்காகவே, இ.மு.க. உறுப்பினர்களை சேரச்சேர அந்தந்த வட்டாரங்களில் நிறுவன நிர்வாகங்களுக்கு உரியவர்களாகத் தயாரிக்க வேண்டும்.

2) இ.மு.க. உறுப்பினர்களைச் சேர்ப்பது இ.ம.இ.தான். எனவே, இ.மு.க. உறுப்பினர்களை விரைந்து விரிந்து சேர்க்க வேண்டும் என்பதற்காக சுமார் ரூபாய் நூறுக்கு மேல் பரிகார முடிகயிறுகள், பரிகார தாயத்துக்கள், பரிகார உருத்திராக்கங்கள் முதலியவைகளை செய்து கொள்ள வேண்டியவர்கள்; எத்தனை ரூபாய் பரிகாரத்திற்காக செலவழிக்க வேண்டுமோ; அத்தனை இ.மு.க. உறுப்பினர்களைச் சேர்த்து; அவர்களின் முகவரிப் பட்டியலேயும், உறுப்பினர் காணிக்கையையும் பதினெண்சித்தர் மடத்திற்கு அனுப்பி வைப்பார்களேயானுல்; உடனே அவர்களுக்குப் பரிகாரத்திற்குரிய முடிகயிறுகளோ, தாயத்துக்களோ, சக்கரங்களோ அனுப்பி வைக்கப்படும்.

உதாரணமாக, சான்ருக, எடுத்துக்காட்டாக ஒருவருக்கு ரூ.108/- மதிப்புள்ள தாயத்தோ அல்லது ரூ. 243/- மதிப்புள்ள சத்தி பீடச் சக்கரமோ பெற வேண்டுமென்ருல்; அதற்குரிய பணத்தை அனுப்புவதற்குப் பதிலாக ஒருவர் 108 உறுப்பினர்களைச் சேர்த்து 108 பேர்களின் முழுமையான முகவரியையும், உறுப்பினர் கட்டணம் ரூ.216ஐயும் அனுப்பி வைத்தால் தாயத்து உடனே அனுப்பி வைக்கப்படும். இதுபோலவே, சத்திபீடச் சக்கரம் பெற வேண்டியவர்கள் 243 இ.மு.க. உறுப்பினர்களைச் சேர்த்து அவர்களின் முழு முகவரிகளையும், உறுப்பினர் கட்டணம் ரூ. 486/-ஐயும் அனுப்பி வைத்தால் சத்தி பீடச் சக்கரம் உடனே உரியவருக்கு அனுப்பி வைக்கப்படும். எனவே, இ.ம.இ.யின் மூலம் இ.மு.க. உறுப்பினர்கள் விரைவாக நாடெங்கும் சேருவார்கள், சேர்க்கப் படுவார்கள். இவர்களை வைத்து பதினெண்சித்தர் மடாதிபதி குழுக்களை எல்லாக் கோயில்களிலும் உருவாக்க வேண்டும்.

அதாவது ஒவ்வொரு கோயிலிலும் உள்ள ஒவ்வொரு கடவுளுக்கும் பதினெண்சித்தர் மடாதிபதி குழு உருவாக்கப்பட வேண்டும். சான்ருக, இராசிபுரம் ஐந்தொழில் வல்ல சிவபெருமான் கோயிலில் உள்ள பைரவர் பதினெண்சித்தர் மடாதிபதிக் குழு 1இன் மடாதிபதி ... வாமகோடிப் பீடம், ... ; பதினெண்சித்தர் மடாதிபதி குழு 2இன் மடாதிபதி, ... வாமகோடிப் பீடம், ... (அதே இராசிபுரம் ஐந்தொழில் வல்ல சிவபெருமான் கோயிலில் உள்ள அதே பைரவருக்கு) ... ; பைரவர் பதினெண்சித்தர் மடாதிபதி குழு 3, ... என்று ஒரே கடவுளுக்கு எத்தனை மடாதிபதி குழு வேண்டுமானுலும் உருவாக்கலாம். இப்படி, ஒவ்வொரு கோயிலிலும் உள்ள ஒவ்வொரு கடவுளுக்கும் எத்தனை மடாதிபதி குழு வேண்டுமானுலும் உருவாக்கலாம்.

இந்த ஒவ்வொரு மடாதிபதிக் குழுவிற்குரிய 18 பேர்களும் வாரத்தில் ஒருநாள் அல்லது பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை அல்லது மாதத்தில் ஒருநாள் அல்லது விருப்பமான மாதத்தில் சில நாட்கள், இரவிலோ அல்லது பகலிலோ பதினெட்டுப் பேர்களும் ஒன்றுகூடியிருந்து 1¼ மணி நேரம் அல்லது 2½ மணி நேரம் (½ சாம நேரம் அல்லது 1 சாம நேரம்) பூசை செய்திட்டால்தான் குறிப்பிட்ட கடவுளுடைய அருள் கிடைக்கும். குறிப்பிட்ட கடவுளும் அந்தக் கருவறையில் செழிப்பாக அருளாட்சி புரிவார்.

3) பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவில் உறுப்பினர் ஆகின்றவர்கள் ஒவ்வொருவரும் படிவ எண் 9ஐ நிறைவு செய்து ரூ.11¼ குருகாணிக்கையாக அனுப்பினால் போதும். அவர்களுக்குரிய சத்தி சித்திச் சக்கரம் அனுப்பப்படும். அந்த சத்தி சித்திச் சக்கரத்தை மார்பு (கழுத்தருகில், தொண்டையருகில்), வலது தோள்பட்டை, பிடரிக் கழுத்து, இடது தோள்பட்டை, நெற்றி ஆகிய 5 இடங்களிலும் சந்தனத்தை தடவிக் கொண்டு சத்தி சித்தி சக்கரத்தை இரண்டு பக்கமும் வைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். அப்பொழுது யாராவது ஒருவர் அன்றாடப் பூசைமொழியில் உள்ள நான்கு பூசைமொழிப் பாடல்களையும் (சத்தி காயந்திரி மந்தரம், சத்தி காயந்திரி மந்திரம், அருட்சினை மந்திறம், கற்பூர சோதி வழிபாட்டு மந்தரம்) ஒருமுறை ஓதிய பிறகுதான் சக்கரத்தை ஓரிடத்திலிருந்து எடுத்து மற்றொரு இடத்தில் வைக்க வேண்டும். (மார்பிலிருந்து வலது தோள்பட்டை, வலது தோள் பட்டையிலிருந்து பிடரிக் கழுத்து என்று). இதுதான் பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவின் பூசைமுறை.

(4) **பதினெண்சித்தர் மடாதிபதி குழு பூசையில் படையல்:**

ஒவ்வொருவர் கையிலும் ஒரே ஓர் ஊதுபத்தியாவது இருக்க வேண்டும். பூசைக்கு வருபவர்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற காணிக்கைகளைக் கொடுத்து மொத்தமாக பொறி, கடலை, அவல், சர்க்கரை இந்த நான்கில் ஒன்று அல்லது இரண்டு (அ) மூன்று (அ) நான்கும் வைத்துப் பூசை செய்யலாம். பூசைமுடிவில், அவரவருக்கும், அவரவர் இல்லத்திற்கு பிறசாதம் வாங்கிக் கொள்ளலாம். கட்டாயம் வந்திருக்கக் கூடிய அனைவருக்கும் பிறசாதம் கொடுக்க வேண்டும். அவர்களுடைய சொந்தக் காரர்களுக்கும் பிறசாதம் கொடுத்தனுப்பலாம். இப்படிப் பூசை செய்வதின் மூலம் அந்தந்தக் கோயிலில் உள்ள கடவுள்கள் புத்துயிர் பெற்று எழுவார்கள்.

**குறிப்பு:-** எனவே, எந்தவொரு கோயிலைப் புத்துயிர்ப்பு செய்ய வேண்டுமென்றாலும், அந்தக் கோயிலுக்கு எட்டு அல்லது பதினாறு (அ) முப்பத்திரண்டு (அ) நாற்பத்தெட்டு (அ) அறுபத்து நான்கு என்று ஐந்து நிலைப்பட்ட பதினெண்சித்தர் மடாதிபதிக் குழு கூட்டங்கள் உருவாக்கப்பட்டு கூட்டு வழிபாடு நிகழ்த்தப் பட்டால் அந்தக் கோயில் புத்துயிர்ப்பு பெறும். இந்த மடாதிபதிக் குழுவைச் சேர்ந்தவர்கள் அந்தந்தக் கோயில்களில் தனித்தனி நபர்களாகவோ, நாலைந்து பேர்களாகச் சேர்ந்தோ வாரத்தின் ஏழு நாட்களில் ஒருநாள் தங்களின் சார்பில் பூசைக்குரிய பொருட்கள் வாங்கிக் கொடுத்து பூசை செய்தால் இவர்களுக்குரிய அருட்பட்டங்கள் சித்தியாகும்.

இப்படியாக, பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவின் மூலம் நாட்டுக்குத் தேவையான பத்தியாளர்கள், சத்தியாளர்கள், சித்தியாளர்கள் கிடைப்பார்கள். மேலும், கோயில்களிலுள்ள கடவுள்கள் புத்துயிர்ப்பு பெறுவார்கள். இப்படியாக அருட்போருக்குத் தேவையான

மாவீரர்கள், தளபதிகள், சேனாதிபதிகள், நாயகங்கள், வியூக நாயகங்கள், பாடிவீட்டுப் பயிற்சி ஆசிரியர்கள், பாசறை நிர்வாகிகள், அருட்போர் வியூக நாயகங்கள், அருட்போர் மாதண்ட நாயகங்கள், ... முதலியவர்கள் எளிதாகத் தேர்ந்தெடுக்கப் படுவார்கள், தேர்ந்தெடுக்கப் படுவார்கள், தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இதுதான் அருட்போர் ஆயத்தப் பணியின் சிறந்த சாதனம்.

எனவே, இவற்றைப் புரிந்து விரைந்து பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுக்களை நாடெங்கும் இ.மு.க. நிர்வாகக் குழுவைச் சேர்ந்த அனைவரும் உருவாக்க வேண்டும். எனவே, தங்களைப் போன்று இ.மு.க.வின் பொறுப்புகளிலுள்ள ஒவ்வொருவரும் பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவை அவரவர்களுக்குத் தெரிந்த ஊர்களிலும், அறிமுகமான வட்டாரங்களிலும் விரிந்து விரைந்து உருவாக்க வேண்டும்.

10.12.5. **பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவில் உள்ள அருட்பட்டத்தவர்களின் அருட்பட்டங்களுக்குரிய விளக்கம்:-**

1. **மடாதிபதி** =>

மடம் = இளமை;

அதி = வளர்ந்து கொண்டே இருக்கும், அழியாதது;

பதி = தலைவன்;

குறிப்பிட்ட கோயில் கடவுளோடு சேர்ந்து ஆவி, ஆன்மா, ஆருயிர் மாறுத இளமையோடு தலைமை பெற்று விளங்கிடும்.

2. **பீடாதிபதி** => அந்தக் கடவுளின் இருக்கை,

அந்த இருக்கையில் அதிகம் வளர்ந்து கொண்டே போவது, அந்தக் கடவுளாகவே மாறி செல்வாக்கு வளர்ந்து கொண்டே போவது.

3. **சன்னிதானம்** => குறிப்பிட்ட கடவுளாகவே வாழுதல், அவருடைய பதிலியாக அருளைத் தானமாக வழங்குவது.

4. **ஆதீனம்** => குறிப்பிட்ட கடவுள், அவரைச் சார்ந்த அருள் உலகம், பொருள் உலகம் அனைத்தையும் தனதாக்கிக் கொள்ளுதல், ஆதீனப்படுத்துதல்.

5. **தம்பிரான்** => தலைவன், குறிப்பிட்ட கடவுளின் தலைவன், குறிப்பிட்ட கடவுளுக்குத் தோழன், குறிப்பிட்ட கடவுளுக்குத் தொண்டன்; குறிப்பிட்ட கடவுளாகவே மாறுதல்.

6. **பண்டாரம்** => கோயிலைச் சார்ந்த சொத்துக்கள் அனைத்துக்கும் முழு உரிமை பூண்டு அருளை மாலையாக அணிந்து கொண்டு; அருளை பிறருக்கும் மாலையாக அணிந்து கொள்ள வைப்பவர்.

பண்டம் = அருட்பண்டம்;
ஆரம் = மாலை;
பண்டம் + ஆரம் => பண்டாரம்.

7. **பண்டார சந்நதி** => அருள் ஆறுக ஓடுகின்றவர்

8. **பண்டார சந்நிதி** => அருளை செல்வமாகப் பெற்றிருப்பவர், வழங்குபவர்.

9. **அரியவாள்** => அரிய = அருமை நிறைந்த;
வாள் = துன்பங்களை வெட்டிக் களையும்;
துரோகிகளை, எதிரிகளை, துன்பங்களை வெட்டி வீழ்த்தும் அருமையான வாள் போன்ற அருளாளர்.

10. **கூரியவாள்** => கூர்மையான வாள்;
அருளுலகில் கூர்மையான வாள் = அருளாற்றலில் கூர்மையான வாள்.

11. **சீரியவாள்** => சிறந்த வாள்;

சீர்மை - சிறந்த வடிவமுடைய வாள், சிறப்புடைய வாள்.

12. **பெரியவாள்** => அருளாற்றலில் பெருமையும், பேராற்றலும் கொண்டு செயல்படக் கூடிய வாள்.

13. **நேரியவாள்** => அருளுலகில் நேர்மையை நிலைநிறுத்துவதற்காக நேரிடையாகப் போரிட்டு வெற்றியைப் பெறுவதற்கு உதவுகின்ற நேர்த்தியான வாள்.

நேர்த்தி = மற்றதோடு ஒப்பிடுவதற்கு சிறந்தது.

14. **வீரியவாள்** => எதிரிகளை அழிப்பதோடு நல்லவர்களுக்கு வீரத்தைத் தருகின்ற வாள்.

தானும் வீரமாக இருந்து பிறருக்கும் வீரத்தைத் தருகின்ற வாள் போன்றவர்கள்.

15. **ஏமகோடிப் பீடம்** => ஏமம் = சுடுகாட்டுத் தீ;

சிவன் வாழ்வின் முடிவு.

இறப்பிலும் சோதிநிலை (ஒளி நிலை) பெற்றுத் தரக் கூடிய, சித்தியைத் தரக் கூடிய பீடம் = பீடாதிபதி.

16. **காமகோடிப் பீடம்** => ‘உலகியலாக உண்டாகக் கூடிய அனைத்து வகையான ஆசைகளும் ஏற்றுக் கொள்ளத் தக்கவையே. எதையும் அடக்கவோ, துறக்கவோ கூடாது. இயல்பான இல்லற வாழ்க்கை வாழ்வதுதான் சிறந்தது’ என்ற சித்தர்நெறியை குறிப்பிட்ட கடவுளின் பதிலியாக இருந்து விளக்குகின்றவர். (மனைவி மக்களோடு இருந்து விளங்குபவர்தான் காமகோடி.)

17. **சோமகோடிப் பீடம்** => சோமம் = தெய்வீகத் தீ. இது முருகனுக்கு உரியது.

முருகன் - போர்ப்படைத் தளபதி, சேனாதிபதி; அதாவது போர்க்குணம் உடைய அனைத்து வகையான கடவுளர்களையும் குறிக்கக் கூடியது.

எனவே, அருளுலகப் பொருளுலகப் பாதுகாப்புக்களுக்காகப் போராடக் கூடிய பீடாதிபதி.

சோமத் தீ அதிகமாகவும், குறையவும் கூடாது; எரியவும் கூடாது. இளமையாக இருக்க வேண்டும். யாராலும், எதனாலும் குறைக்கவோ, மறைக்கவோ, அதிகமாக்கிடவோ முடியாத ஒன்று; நிலையாக இருக்கும். எப்பொழுதும் வெற்றி தரக்கூடிய தீயாக, கடவுளின் ஆற்றலாக, குறிப்பிட்ட கடவுளின் பதிலியாக வாழலாம்.

18. **வாமகோடிப் பீடம்** => மிகக் குறுகியதாக, சிறியதாக, நெற்றிக்கண் போன்றது. புருவ மையத்திலிருந்து ஒளிவிட்டுக் கொண்டிருப்பது. விளக்கின் சுடர் போன்றிருப்பது.

இந்த வாமத்தீ எப்பொழுது வேண்டுமானாலும் விசும்பளந்த அகண்டப் பெருந்தீயாக மாறும்.

வாமனம் - திருவிக்கிரமனாகப் (*விசுவரூபம்*) பேருருக் கொண்டு செயல்பட்டது போல்;

சிவபெருமான் நெற்றிக் கண்ணிலுள்ள தீ; திரிபுரத்தை எரிக்கக் கூடியதாக பேருருக் கொண்டது போல்; மிகப்பெரிய வடிவம் பெற்றுச் செயலாற்றக் கூடிய வல்லமை பெற்றது வாமத் தீ. எனவே, இது பயிற்சியால் குறிப்பிட்ட கடவுளை எப்பொழுதும் தன்னுடைய நெற்றிக் கண்ணில் வைத்திருப்பது. இந்த வாமகோடிப் பீடம் கண்ணைத் திறந்து பார்த்தாலும் சரி, கண்ணை மூடி நினைத்தாலும் சரி; நினைத்தது நடக்கும். அவ்வளவு பெரிய சித்தி நிலை உடையது வாம சித்தி.

கோடி = எல்லை; பெரியது; முழுமையானது; பேராற்றல் உடையது, ... என்று 14 சொற்களில் பொருள் சொல்லப்படுகிறது. எனவே ஏம,

காம, சோம, வாம என்ற நான்கும்தான் நான்வேதங்களாக இருக்கின்றன.

வரிசையாகச் சொன்ஞல்,

இருக்கு வேதம் = ஏமகோடிப் பீடம்;
அசுர வேதம் = காமகோடிப் பீடம்;
யாம வேதம் = சோமகோடிப் பீடம்;
அதர்வான வேதம் = வாமகோடிப் பீடம்.

10.12.6. (1) பொதுவாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் அருட்பணி விரிவாக்கத் திட்ட நிர்வாகக் குழு மாவட்ட அளவில் அமைக்க வேண்டும்.

(2) இரண்டாவதாக இந்து முன்னேற்ற கழகத்திற்கு மாவட்டப் பெரியவர்களைக் கொண்டு (ஆண்கள் சார்பாக) இ.மு.க. நிர்வாகக் குழு ஒன்று அமைக்க வேண்டும். ஆனுல், இதில் ஓரிரு பெண்கள் இடம் பெறலாம். ஏனெனில், இது பொது நிர்வாகக் குழு.

(3) மூன்ருவதாக இ.மு.க.விற்கு மகளிர் அணி நிர்வாகக் குழு ஒன்று அமைக்க வேண்டும்.

(4) நான்காவதாக கல்லூரியிலும், மேல்நிலைப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளியிலும் படித்துக் கொண்டிருக்கக் கூடிய மாணவ மாணவியர்களுக்கென்று பொதுவாக **இ.மு.க. மாணவர் அணி நிர்வாகக் குழு** என்ற ஒன்று அமைக்க வேண்டும்.

(5) ஐந்தாவதாக, படித்து முடித்த இளம் வயது ஆண், பெண்களுக்கும், படிக்காத இளம் வயது ஆண், பெண்களுக்கும் சேர்த்து மொத்தமாக **இ.மு.க. இளைஞர் அணி நிர்வாகக் குழு** என்ற ஒன்று அமைக்க வேண்டும்.

இதேபோல், ஆறுவதாக இ.ம.இ.யின் மாவட்ட நிர்வாகக் குழு, ஏழாவதாக இ.ம.இ.யின் மகளிர் அணி நிர்வாகக் குழு, எட்டாவதாக இ.ம.இ.யின் மாணவர் அணி நிர்வாகக் குழு, ஒன்பதாவதாக இ.ம.இ.யின் இளைஞர் அணி நிர்வாகக் குழு என்று ஆக மொத்தம் ஒன்பது நிர்வாகக் குழுக்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உருவாக்கப் பட வேண்டும்.

ஒவ்வொரு நிர்வாகக் குழுவிற்கும், 1. தலைவர், 2. இணைத் தலைவர், 3. துணைத்தலைவர், 4. செயலாளர், 5. இணைச் செயலாளர், 6. துணைச் செயலாளர், 7. அமைப்பாளர், 8. இணை அமைப்பாளர், 9. துணை அமைப்பாளர், 10. பொருளாளர், 11. இணைப் பொருளாளர், 12. துணைப் பொருளாளர் என்று பன்னிரண்டு பதவிகளுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இப்படி, ஒவ்வொரு நிர்வாகக் குழுவிற்கும் பன்னிரண்டு பேர்கள் பதவியேற்பார்கள் என்றால்; மொத்தமுள்ள நிர்வாகக் குழு ஒன்பதிற்கும் சேர்த்து மொத்தம் 108 பேர்கள் நமது நிறுவன நிர்வாகங்களுக்காக பதவியேற்பவர்களாவார்கள். இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் நூற்றெட்டுப் பேர்களுக்குப் பதவிகள் கொடுப்பதின் மூலம்தான், நமது நிறுவன நிர்வாகம் நல்ல வலுவான கட்டமைப்புப் பெற்றிடும்.

இதேபோல், ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒன்பது நிர்வாகக் குழுக்களை உருவாக்கி நூற்றெட்டுப் பேர்களை மண்டல நிர்வாகக் குழு உறுப்பினர்கள் என்ற பதவிகளில் நிறுத்த வேண்டும். அப்பொழுதுதான் நமது நிறுவன நிர்வாகங்கள் நல்ல வளமான கட்டமைப்புக்களைப் பெற்ற ஒன்றாகிடும். இதேபோல், ஒவ்வொரு வட்டத்திற்கும் (தாலுகா) அல்லது வட்டாரத்திற்கும் (Blocks or Unions) முதன்மையான பெரிய நகரங்களுக்கும் ஒன்பது நிர்வாகக் குழுக்களை உருவாக்கினால் நூற்றெட்டுப் பேர்கள் பொறுப்புள்ள நிர்வாகக் குழு பதவியில் அமர்வார்கள். இவர்களைக் கொண்டு

மிக எளிதாக நமது அருட்போருக்குரிய ஆயத்தப் பணிகளைச் சிறப்பாகத் துவக்கலாம் (ஆரம்பிக்கலாம்).

10.12.7. இப்படியாக நமது அருட்போர் ஆயத்தப் பணிகள் ஆரம்பமாகி விட்ட நிலையில்; நமது அருளாட்சி நாயகம், "பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுதான் இன்றைய நிலையில் நமது கொள்கை, குறிக்கோள், நோக்கம், போக்கு, ஊக்கு முதலிய அனைத்திற்கும் சிறப்பாக உதவக் கூடிய சிறந்த சாதனமாகும்" என்று கூறியதின்படிதான் நமது நிறுவன நிர்வாகங்களுக்குத் தேவையான உறுப்பினர்களை பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவில் செயல்படுவதன் மூலம், நம்மவர்கள் மிகச் சிறப்பாக பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைப் பெறும்படிச் செய்ய முடிகிறது. மேலும், நம்மவர்கள் பலராகச் சேர்ந்து ஒன்று கூடிச் செயல்படக் கூடிய எல்லாவகையான பக்குவங்களையும், பயிற்சிகளையும் பெற முடிகின்றது. எனவே, இவற்றையெல்லாம் உணர்ந்து தாங்கள் மிகச் சிறப்பாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்பட வேண்டும்.

11. .. .. .. .. .. .. .. .. .. நமது இருக்கு வேதத்திலும், (இருடிவேதம், ரிக்வேதம்), யாம வேதத்திலும் (சாம வேதம்) ஆண் பெண் என்ற வேறுபாடின்றி, ஒவ்வொருவரும் அவரவர் வசதிவாய்ப்புக்களின் படியும், விருப்பங்களின் படியும் தேவைகளுக்கேற்பவும்; ஒரு திருமணம் முதல் நாற்பத்தெட்டு திருமணங்கள் வரை செய்து கொள்ளலாம் என்ற கருத்து மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ஒவ்வொரு ஆணும் பெண்ணும் நாற்பத்தெட்டு முறை திருமணம் செய்து கொள்ளும் உரிமை பெற்றிருக்கிறார்கள் என்பதுதான் இந்து வேதக் கருத்து, இந்து மதக் கருத்து. இதற்காகத்தான், "விதவை என்ற ஒன்று இல்லை", என்றும்; "பெண் என்பவள் மாதந்தோறும் மலர்கின்ற மலர்" என்றும்; "பெண்ணே பூசைக்கு வந்த மலர்" என்றும்; "பெண்ணில்லாமல்

எந்த ஒரு சத்தி சித்தி முத்தியும் இல்லை" என்றும்; "ஆணும் பெண்ணும் அனைத்திலும் சமம்" என்றும்; "ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள உரிமையும் பெருமையும் சமமானவையே" என்றும்; "ஆணுக்கும் பெண்ணுக்கும் சம நீதியே" என்றும்; ... பல கருத்துக்கள் இந்துவேத நூல்களிலும், இந்துமத நூல்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. இவை பற்றி நமது குருதேவர் அறிக்கைகளிலும் (மாத இதழ், மாத வெளியீடு), நமது அச்சிட்ட நூல்களிலும் மிகத் தெளிவாகக் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறோம். கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறோம். .. .. ..

12. இ.மு.க.வின் மேற்கு மண்டல தலைவராகப் பொறுப்பேற்றுள்ள தாங்கள் "தனிமனிதத் தவறுகள் தத்துவத்தின் தவறுகளாகாது" என்ற கருத்தை நன்கு புரிந்து செயல்பட வேண்டும். பிறருக்கு நன்கு புரியவைத்தும் செயல்பட வேண்டும். உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள அறுவசியமாகச் சான்றுகளையும், ஊன்றுகளையும், நமது நிறுவன நிர்வாகங்களையும், நம்மிடம் உள்ள பழையவர்களையும், புதியவர்களையும் தேடி, நாடி, ஓடி அலையத் தேவையில்லை. உங்களுடைய ஏட்டறிவுக்கும், பட்டறிவுக்கும் எட்டாத முயற்சிகளில் அவசரப்பட்டு கண்ணை மூடிக் கொண்டு இறங்கி விட வேண்டாம்.

ஏனென்றால், நாம் எவ்வளவுதான் மிகமிகத் தொன்மையான, பழமையான, மேன்மையான, நன்மையான, உண்மையான கருத்துக்களை ... எடுத்து எடுத்துக் கூறிக் கொண்டிருந்தாலும் சரி; செயலாக்கிக் கொண்டே இருந்தாலும் சரி, நமக்கென்று ஏட்டிலும், நாட்டு நடப்பிலும் கணிசமான வளர்ச்சி ஏற்பட்டுவிட்ட பிறகுதான் எல்லோருமே நம்மை விமர்சிக்காமல் ஏற்றுக் கொள்ள முன் வருவர். அதாவது வளர்ந்து விட்ட தலைவர்களோ, நிறுவன நிர்வாகமோ எத்தகைய மாபெரும் தவறுகளைச் செய்திட்டாலும்

அதனை ஏடும் நாடும் எளிதில் எதிர்க்க முற்பட மாட்டா. இதனைப் புரிந்து கொள்.

மேலும் சிறப்பாக ஒன்றினை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம். நீ, உன் மனம் போன போக்கில் செயல்பட்டு அதற்கு தலைமையைச் சான்றாகவும், ஊன்றாகவும், உதவியாகவும், பக்கபலமாகவும் காட்டிக் கொள்ள முயற்சிப்பது உன்னைப் பொறுத்தவரை பெரிய தோல்வியேயாகும். ஏனென்றால், நீ உன்னை அறியாமல்; "பதினெண்சித்தர் நெறிப்படிதான் வாழுகிறேன் நான்" என்று எங்கும் எவரிடத்தும் எப்போதும் கூறி வருகிறாய். இக்கூற்று உன் நெஞ்சத்தின் அடித்தளத்திலிருந்து வெளிவருமாயின் வெற்றி பெற்றிருக்கும். ஆனால், இக்கூற்று வெறும் வாய்ச்சொல்லாகத்தான் இருக்கிறது. ஏனென்றால் பதினெண்சித்தர்களின் சித்தர் நெறி,

*"தன்னை யறிந்தால் தலைவனை யறியலாம்*
*தலைவனை யறிந்தால் தன்னை யறியலாம்"*

என்ற கருத்தைத்தான் ஆணித்தரமாக அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகிறது. தாங்கள் தங்களை அறிந்து தலைவனை அறிந்து கொண்டீர்களா? அல்லது தலைவனை அறிந்து தங்களை அறிந்து கொண்டீர்களா? என்பதை மீண்டும் மீண்டும் நன்கு சிந்தித்துப் பார்த்துத் தங்களை தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். அப்பொழுதுதான், **தாங்கள் தங்களையும் அறிந்து கொள்ளவில்லை; தலைவரையும் அறிந்து கொள்ளவில்லை** என்ற பேருண்மை தங்களுக்குப் புரிந்திடும். எனவே, தாங்கள் இனிமேலாவது, **எந்தத் தனிமனிதரின் வீடுகளுக்கும் செல்ல வேண்டாம்**. தேவையில்லாமல் வீணாக உரையாடல்களிலும், மற்ற விசாரணைகளிலும் உங்களின் காலத்தையும், கருத்தையும் வீணாக்க வேண்டாம், வீணாக்க வேண்டாம், வீணாக்க வேண்டாம். இதை அன்பார்ந்த அருளூறு பரிந்துரை அறிவுரையாக ஏற்றுக் கொள்ளவும். இதைப் பொறுமையாக இ.ம.இ.யின் மேற்கு மண்டலச்

செயலாளர் அருள்மிகு சித்தர் மகன் சித்தரடியார் சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானம் இரா. வெங்கடேசன் M.A., B.L., பலமுறை திருப்பித் திருப்பிப் படிக்க கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இந்த அஞ்சலுக்கு இயந்திர நகல் வேண்டுமென்று கேட்டால்; தாங்கள் மூன்று இயந்திர நகல்களுக்குரிய பொருளுதவி தந்தால்தான் தங்களுக்கு இயந்திர நகல் தயாரித்துத் தருவார். ஏனென்றால், தங்களிடம் உள்ள நகல் சென்னை அம்பத்தூர் தலைமைப் பீடத்திற்கும், பொன்னேரி பதினெண்சித்தர் மடத்திற்கும் ஒரே சமயத்தில் தயாரிக்கப் பட்டாக வேண்டும் என்பதுதான் அருளாணை பெற்ற குருவாணை. எனவே, இதற்காக, உயர்திரு வெங்கடேசன் அவர்களைக் கோபித்துக் கொள்ள வேண்டாம். ஒருவேளை உங்களிடம் பொருளாதார வசதியில்லையெனில் பொறுமையாக இருங்கள். மிக விரைவில் வெங்கடேசன் அவர்கள் இ.ம.இ.யின் ஆதரவில் இயந்திர நகல்கள் தயாரிக்கும் போது உங்களுக்கும் ஒரு நகல் தருவார். அதுவரை, உங்களுக்கு எப்பொழுதெல்லாம் விருப்பமிருக்கிறதோ அப்பொழுதெல்லாம் உயர்திரு வெங்கடேசனிடம் சென்று இந்த நெடிய அஞ்சலைப் படித்துக் காட்டச் சொல்லிக் கேட்டு அமைதியும், நிம்மதியும் அடையுங்கள்.

**குறிப்பு:-** தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் எதிர்பாராத பற்றுக்குறை நிலைகள் வந்துவிட்ட காரணத்தினால் தலைமைப் பீடத்திற்கு வரவோ, தலைமைப் பீடத்திற்காக செயல்படவோ செலவழிக்கவோ இல்லாமல் இருப்பதற்காக வருந்த வேண்டாம். ஒருவேளை, இ.மு.க.வில் கூட தங்களால் இன்றைய வறிய நிலையில், பற்றுக்குறை நிலையில் செயல்படவியலாது என்றால்; தாங்கள் தங்களுடைய விருப்பம் போல் குறிப்பிட்ட காலத்திற்கு இ.மு.க. பணிகளிலிருந்து விலகி தங்களுடைய சொந்தக் குடும்பப் பணிகளில் முழுமையாக ஈடுபட்டு தங்களுடைய வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளுங்கள்.

வலிமைப்படுத்திக் கொள்ளுங்கள், செழுமைப்படுத்திக் கொள்ளுங்கள். அது **தவறில்லை, தவறில்லை, தவறில்லை, தவறேயில்லை**. தங்கள் விருப்பம் போல் செயல்படுக, செயல்படுக, செயல்படுக.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்.

**அருளாணை பெற்ற குருவாணை.**

**அருளாணைக் குருவாணை ஓலைநாயகம்,**

**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,**

30.8.92.

***குருதேவர் திருவாய் மலர்ந்தருள எழுதியவர்:***

இ.ம.இ., இ.மு.க. இணைப் பொதுச் செயலாளர்,

அருள்மிகு குருமாரியம்மன் சன்னிதானம், இரா. சீனிவாசன், (M.Com.)

**//உண்மை நகல்//**

**//மூல நகல்: சித்தரடியான் திரு இரா. சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது//**

# இந்துவேதம் தமிழ் மொழியில் இருக்கிறது.

# உலக வேதம்தான் இந்துவேதம்

இந்துவேதம் உலகம் முழுவதும் இருந்த ஒரு வேதம்; இன்று கேட்பாரற்றுப் போய், கவனிப்பார் அற்றுப் போய், இமயம் முதல் குமரி வரை வாழ்ந்து வந்து, இன்று சுருங்கி தமிழ் நாட்டில்தான் இருக்கிறது. தமிழ் மொழியில் இந்துவேதம் இருக்கிறது. இந்து வேதத்திற்குரிய எல்லா கடவுள்களும், கோயில்களும் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அருளாளர்கள் இங்குதான் இருக்கின்றனர்; நாயன்மார்கள், ஆழ்வார்கள் தமிழர்கள்தான். 'இந்துவேதம் தமிழ் மொழியில் இருக்கிறது. உலக வேதம்தான் இந்துவேதம்' என்று மக்களுக்கு விளக்கவே இந்துவேத விளக்க கூட்டங்கள் நடத்தப்படுகிறது.

மக்களிடையே நாத்திகர்கள், ஆத்திகர்கள், அந்நியர்கள் 'ஒரே கடவுள்தான் இருக்கிறார்' என்று கூறுகிறார்கள். 'ஒரே கடவுள் இருக்கின்ற மதம்தான் சிறந்தது' என்று கூறி வருகிறார்கள். ஆகவே நம்மவர்கள் இதனை அறிந்து மக்களுக்கு 'கோடிக்கணக்கான கடவுள்கள் இருக்கின்றார்கள், தமிழ் மொழியில்தான் இந்துவேதம் இருக்கிறது, உலக வேதம் இந்துவேதம்தான்' என்பதை உலக மக்களிடையே பரப்பியாக வேண்டும். மற்ற மதத்தை புண்படுத்த இதை சொல்லவில்லை.

கி.மு. 100 முதல் கி.பி. 150 வரை வாழ்ந்த 10வது பதினெண்சித்தர் பீடாதிபதியும், கி.பி. 785 முதல் கி.பி. 1040 வரை வாழ்ந்த 11வது பதினெண்சித்தர் பீடாதிபதியும் முயற்சித்து கடவுள்களை வரவழைத்துக் கேட்ட பதில்களைத்தான் இப்போது நாம் சொல்லிக் கொண்டு இருக்கிறோம்.

ஆதிசிவஞர் 10வது பதினெண்சித்தர் பீடாதிபதியின் காலத்தில் தோன்றி இந்துவேதத்தை விளக்கிச் சொன்ஞர்; அதன்படிதான் 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும் தோன்றிஞர்கள்.

மீண்டும் இந்துவேதம் நலிந்து, மெலிந்து, தேய்ந்து, ஓய்ந்து போய்விட்டது. ஆகவே, 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி பிறமனே கூப்பிட்டு இந்துவேதத்தை சொல்லச் சொன்ஞர். அந்த பிறம்ம வேதம்தான் ஒரே ஒரு கடவுள்தான் இருக்கிருரா? என்பதற்கு விடை சொல்கிறது. இந்த பிறம்ம வேதம்தான் கடவுள் ஒருவரா? என்பதற்கு விடை கூறுகிறது. இறையஞர் கூறிய இந்து வேதமும் பிறமண் கூறிய இந்து வேதமும் இதற்கு பொருள் கூறுகிறது, அது எந்த மதத்தினரும் புண்பட சொல்லக்கூடிய கருத்து அல்ல.

உண்மையான கருத்தினேத்தான் இந்த இந்துவேதம் கூறுகிறது. எல்லா மதத்தினரும், வேதத்தவரும் சிந்திக்க வேண்டும்; இந்துக்கள் சிந்திக்க வேண்டும். முதலில் இந்துக்களே! நீங்கள் சிந்தியுங்கள், தமிழகம்தான் இந்து மதத்தின் நாற்றங்கால். உண்மைகளே புரிந்து கொள்ளுங்கள், தெரிந்து கொள்ளுங்கள், உலகிற்கு எடுத்துக் கூறுங்கள்.

தமிழன் விழிச்சி பெற்று, செழிச்சி பெற்று, எழுச்சி பெற்று, முறையான பயிற்சி பெற்று இந்து வேதத்தினே உலக மக்களுக்கு விளக்க வேண்டும்.

**// குருதேவர் ஆற்றிய உரையிலிருந்து (இந்து வேதம் ஒலிப்பேழை எண்: 4) எடுக்கப்பட்ட ஒரு பகுதி. //**

# காகிதப் புரட்சி

" ... ... யாம், செய்யவிருக்கும் புரட்சியும் சரி, போரும் சரி; காகித அளவிலேயே, 'காகிதப் புரட்சியாக', 'காகிதப் போராக' நிறைவு பெற வேண்டுமென்றுதான் எதிர்பார்க்கிறோம். எனவே, இதற்காக மிகப் பெரிய வீரதீர சாகசங்கள் தேவையில்லை, மிகப் பெரிய இழிவழிவுகள் தேவையில்லை, மிகப் பெரிய தியாகங்கள் தேவையில்லை..... ஆனால்!?.... ஆனால்!?.... ஆனால்!?.... எளிமை தேவை, பண்பு தேவை, துணிவு தேவை, கனிவு தேவை, இனிமை தேவை, அனைவரோடும் ஒத்துப் போகும் நுண்மை தேவை, அருளுலகத்தில் உடை, உணவு, உறையுள், உறவு, உரிமை, ஒழுகலாறு,... முதலியவற்றைக் கட்டுப்பாட்டோடு கடைப்பிடிக்கும் திண்மை தேவை, திண்மை தேவை, திண்மை தேவை. ... ..."

**//தமது அடியானுக்கு 31.05.1992இல் குருதேவர் எழுதிய அஞ்சலிலிருந்து எடுக்கப்பட்ட வரிகள்.//**





மெய்ஞ்ஞானக்கொடி



**11வது பதினெண்சித்தர் பீடாதிபதி** **12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 – 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

"இந்து மதக் கோயில்களில், பெரியபெரிய கோயில்களில் உள்ள பூசாறிகள், அருட்சினையாளர்கள், குருக்கள்கள், பட்டர்கள், பட்டாச்சாரியார்கள், பண்டாரங்கள், ... முதலியவர்கள் ஏன் மக்களுக்கு மந்திரிப்பதில்லை? ஏன் திருநீறு, குங்குமம், சந்தனம் பூசி விடுவதில்லை? ... ???"

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

**காணிக்கை: ரூ.10/-**